சிவ வடிவங்களில்

அன்னை பராசக்தி



பூசை. ச. அருணவசந்தன்

சிவசுந்தரி கலைக் கூடத்தின்

மஹா சிவராத்திரித் திருவிழா வெளியீடு - 2018


கானமர் சோலைக் கபாலீச்சரத்துக் கபாலிநாதனும் கற்பக வல்லியும்
மிகநல்ல வீணைமீட்டி இன்னிசைபாடி மகிழும் கோலம்

உ
சிவமயம்

சிவ வடிவங்களில் அன்னை பராசக்தி



ஆசிரியர் சிவமஞ்சரிச் செம்மல், அருட்பணிஅரசு, சிவசேவாரத்னம்

பூசை.ச.அருணவசந்தன்

ஸ்வஸ்திஸ்ரீ ஹேவிளம்பி வருஷம் மாசிமாதம் 1-ஆம்நாள்13.02.2018 செவ்வாய்க்கிழமை

சிவசுந்தரி கலைக்கூடத்தின்

சார்பில் நடைபெற்ற "**மகா சிவராத்திரி**" நள்நாளில்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம்


சீர்-வளர்-சீர் அம்பலவாண தேசிக பரமாச்சார்ய ஸ்வாமிகள்

அருளாசியுடன் வெளியிடப்பட்டது.

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ணமுதலி கார்டன் தெரு

ஆழ்வார்பேட்டை, சென்னை-18, அலைபேசி எண் 9941124964



நூலின் விவரம்

நூலின் பெயர் : சிவ வடிவங்களில் அன்னை பராசக்தி

நூலின் ஆசிரியர் : பூசை.ச.அருணவசந்தன்

பதிப்புஆண்டு : முதற்பதிப்பு- 15.02.2018, மகா சிவராத்திரி நன்நாள்

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாளர்/ஆசிரியர் : பூசை.ச.அருணவசந்தன், ப.எண்.29,பீமண்ண முதலி கார்டன் தெருஆழ்வார்பேட்டை, சென்னை-600 018 அலைபேசி 9941124964

பக்கங்கள் : 56 + 10 ஆக 96 பக்கங்கள்

நூல் அளவு : கிரெளன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)

அச்சிட்டுள்ள பரப்பளவு : 21.5 செ.மீ.X 15.2 செ.மீ.

பயன்படுத்தப்பட்டுள்ள தாள் : பலாப்பூர் 11.6கிகி பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்: 11.6 ஸ்ரீலிபி

மின் அச்சுக்கோவை : சிவசுந்தரி, ஏ 9 சாந்தி அடுக்ககம்70.ஆதம் தெரு மயிலாப்பூர், சென்னை-4

மறுதோன்றி அச்சகம் : பிரின்டெக் இந்தியா,சென்னை-600 005,

நூலின் பொருள் : சிவ வடிவங்களில் சிவபெருமானோடு இருக்கும் அன்னை பராசக்தி வடிவங்கள்பற்றிய செய்திகளின் தொகுப்பு .

நன்கொடைவிலை : ரூபாய் 100/-

¶âç¦!_ --திருவீழிமிழலை மாப்பிள்ளை சாமி (கல்யாண சுந்தரர்).

பின் அட்டையில் - பேரூர்ப் புராணத்தில் இடம் பெற்றுள்ள பள்ளுப் படலத்தை விளக்கும் ஓவியம்.



இந்த இனிய வேளையில்....

பேரன்புமிக்கப் பெருந்தகையீர்!

எல்லையில்லதோர் ஆனந்த வடிவான சிவபெருமானின் திருவருளும் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமி**களின் குருவருளும் துணை நிற்க எமது **சிவசுந்தரி கலைக்கூடத்தின்** வெளியீடான **சிவவடிவங்களில் அன்னை பராசக்தி** என்ற இந்நூல் சிவராத்திரி நன்நாளில் வெளியிடப்படுகிறது.

சைவ சமயத்தின் முதன்மைபெற்ற மந்திரம் **சிவாயநம** என்றும் பஞ்சாட்சரம் என்றும் சொல்லப்பெறுகிற ஐந்தெழுத் து மந்திரமாகும். இவ்வைந்தெழுத்துகளும் மந்திரத் தன்மை மிக்கதனி எழுத்துக்களாகவும், தனிச் சொல்லாகவும் கொள்ளப் பட்டுப் பல்வகையான பொரு ளினாலும் பல்வகையான விளக்கங்களாலும் அறியப்படுகின்றன.

சி= சிவம் [பதி],வ= சக்தி [அருள்], ய=உயிர்[ஆன்மா]ந=திரோதம் [மறைப்பு], ம= மலம் [பாசம்],இதில் இரண் டாவதாக வரும் வ= சக்தி [அருள்] சக்தி என்னும் இதன் இயல்பு மகாசங்கார காலத்தில் சிவத்தில் அடங்கியிருத்தலும், புனர் உற்பவ காலத்தில் ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, பராசக்தி என பஞ்ச சக்தியாக விரிவடைந்து, சிவம் ஐந்தொழில் செய்வதற்குத் துணையாக இருத்தலும், சிவத்துக்குத் திரு மேனியாக இருத்தலும் ஆகும்.

" **எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்** " என்பதையே அபிராமி பட்டர் "**சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும்**" என்றார். "அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்பதைச் சாத்திரம் காட்டுகிறது. (சக்தியைபெண்மையாகக் கொண்டு போற்றுவதுமரபு) இறைவன் தன் திருமேனியில் இடப்பாகத்தை அன்னை பராசக்திக்கு அளித்துள்ளார். இறைவனைப் போல் இறைவி பராசக்தியும் அருள் வடிவாகி அன்பர்களுக்கு அருளை வாரி வழங்குகிறார். இவளை "**காரணி, காரியம் ஆகக் கலந்தவள்** " என்று திருமூலர் குறிப்பிடுகிறார். எல்லா வற்றுக்கும் காரணமாகவும், படைத்தல் முதலிய தொழிலில் கலந்தவளாகவும் இருக்கிறாள் பார்வதியாகிய பராசக்திதேவி "**அம்மையே அப்பா ஒப்பிலா மணியே**" என இறைவனைத் தாயாகவும், தந்தையாகவும் பாவிக்கின்றார் மணிவாசகப் பெரு மான். "**அப்பன்நீ, அம்மைநீ**" என்று விளிக்கிறார் அப்பர் பெருமான்.

சிவனும் சக்தியும் வெம்மையும் குளிர்ச்சியுமாய் இருந்துஉலகைக் காக்கின்றனர். அன்னை பராசக்தி இறைவனையே மருவிநின்று புவனம் பதினான்கினையும் பூத்தவண்ணம் காத்து நிற்கின்றாள். நாயகி, நான்முகி, நாராயணி, சாம்பவி போன்ற சிறப்பு நாமங்களால் போற்றப் பெறுபவர் அன்னை பராசக்தி. இறைவனின் இடப்பாகத்தைக் கொண்டு ஆட்சி செய்கிறார். அத்தகு பெருமையுடைய உலக உயிர்களுக்கெல்லாம் அருளைச் சுரக்கின்ற தாயாக விளங்குகின்ற, ஆனந்தமாய் அறிவாய் அமுதமாய் விளங்குகின்ற அன்னை பராசக்தி, திருக்கோயில்களில் காணப்

பெறும் சிவடிவங்களுடன் அன்னை எவ்வாறெல்லாம் காணப்பெறுகிறாள் என்பதைத் தெளிவாகக் காட்டும் வகை யில் " **சிவவடிவங்களில் அன்னை பரா சக்தி** " என்ற இந்நூல் வெளியிடப்படு கிறது.

இந்நூலில் சிவபெருமானின் பல் வேறு வடிவங்களில் அன்னை பரா சக்தியின் வடிவ அமைப்புகள் பற்றி விளக்கமாகவும் எளிதில் புரிந்து கொள் ளும் வகையிலும் கூறப்பட்டு உள்ளது. உமாமகேஸ்வரர் கோலத்தில் அன்னை அமர்ந்தும், சந்திரசேகரர் வடிவத்தில் அன்னை நின்ற கோலத்திலும் காட்சி அளிக்கிறார். ஈசனின் சோமாஸ்கந்தர், உமாமகேஸ்வரர், சந்திரசேகரர், நடராஜர் முதலிய வடிவங்களில் அம்பிகையை அமைத்து வழிபடுகிறோம் என்றும், லிங்கோற்பவர், ஏகபாதர், பிட்சாடனர், கங்காளர், காமதகனர் போன்ற வடிவங் களில் அம்பிகையை உடன் வைத்து வழிபடும் வழக் கம் இல்லை என்பதை யும் குறிப்பட்டுள்ளது செய்தி." **நவரசம் காட்டும் நாயகி** "என்ற தலைப் பில் அமைந்த கட்டுரையில் தமிழ் இலக் கிய நூலான தொல்காப்பியத்தில் குறிப் பிட்டுள்ள நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டு மெய்ப்பாடுகளு டன் சமநிலை என்பதையும் சேர்த்து ஒன்பது வகையான மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தும் கோலங்களில் அன்னை பராசக்தி காட்சிதருகிறாள் என்பதும் . சிவன் தோன்றும் கோலத்திற்கு ஏற்ப அன்னை பராசக்தியும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியுள்ள வடிவச்சிறப்புகளும் இந்நூலில் மிகஅற்புதமாக விளக்கப்பட் டுள்ளன.

இந்த இனிய வேளையில் இந் நூல் மலர்ந்து மணம் பரப்பத் துணை நின்ற அனைவரையும் போற்றி வணங்கி நன்றி பாராட்டி மகிழ்கின்றேன்.

இந்த இனிய வேளையில், எனது இந்த எழுத்து மற்றும் பதிப்புப் பணி களுக்கு நல்லாதரவு தந்து வரும் எனது அன்பிற்கினிய சகோதரி **திருமதி. அனந்த லட்சுமி,** அவரது கணவர் **கயிலை மணி வரத வீரராகவன்** அவர்களுக்கும், எப் போதும் துணையிருந்து ஆலோசனை கள் வழங்கி படிகளைத் திருத்தி உதவி வரும் சித்தாந்த ரத்தினம்.டாக்டர். **விஸ்வ ஆறுமுகம்** (மேனாள் விஞ்ஞானி.) அவர்களுக் கும் எனது பணிகளுக்கு ஆதரவாக இல் லப் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வரும் எனது மனைவி **திருமதி. வசந்தா** அவர்களுக்கும் இந்நூலைப் பிழைதிருத்தம் செய்து தந்த திருமழிசை ஓய்வுபெற்ற **தலைமை ஆசிரியர் நல் லாசிரியர் திரு.எஸ். ஜெயகுமார்** அவர்களுக் கும் எனது இதயம் கனிந்த நன்றி மலர்களைத் சூட்டி மகிழ்கிறேன்.

கொன்றை மலரையும், சண்பக மாலையையும் அணிந்த ஆனந்தக் கபா லீசரும் அவரது இடப்பாகத்தில் என் றும் நீங்காப் பெருங்காதலோடு எழுந் தருளியிருக்கின்ற கற்பகவல்லியான அன்னை பராசக்தியும் அன்பர்கள் யாவ ருக்கும் சகல செல்வயோகமிக்க பெரு வாழ்வை அளித்து எந்நாளும் இன்ப முடன் வாழ வைக்க வேண்டு மென்று அவர் தம் பொற்பாதங்களைப் போற்றி வணங்கி வேண்டிக் கொள்ளுகிறேன்.

என்றும் சிவப்பணியில்,

10.02.2018 **மீளா அடிமை**

பூசை.ச. ஆட்சிலிங்கம் (எ)

பூசை. ச.அருணவசந்தன்.

அன்பர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்!



சித்தாந்தச் சுடர் சிவாலயம். ஜெ.மோகன்
அபிராமபுரம், மயிலை, சென்னை - 4.


குருஜி **K.K. கோபாலன் சர்மா**
பரமேஸ்வரி நகர், அடையார், சென்னை

திரு. பேரா. **ஞான அம்பலவாணன்**
வடக்கு வீதி சிதம்பரம்

இருமொழி சீராளர், திருவாசக மாமணி
திருவையாறு வெ.இரமணன்
இருப்பு சிதம்பரம்

திரு.தில்லை. நாடியன் செல்வன்
பெங்களூர்

அன்பர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்!



மண்ணடி **சிவஸ்ரீ.மோகன் (எ) சபாரத்தினசிவாச்சாரியார்**
அருள்மிகு நடராஜர் ஆலயம் மண்ணடி, சென்னை-1

சிவாகமஸ்ரீ **சேனா. கபாலி (எ) வைத்தியநாத குருக்கள்**
அருள்மிகு கபாலீசுவரர் கோயில், மயிலாப்பூர், சென்னை-4

சிவஸ்ரீ **இராஜ. முரளி**
அலமேலுமங்காபுரம், மயிலை,
சென்னை-4.

கோவை சிவஸ்ரீ **வடிவேல் கண்ணன்**
கோவை சிவனடியார் திருக்கூட்டம்

சிவநெறித்தொண்டர் **ஆ.சீ.சிவதாசன்** (ரகோத்துமன்)
அருள்மிகு நடராஜர் ஆலயம் ஆலப்பாக்கம், சென்னை

சிவஸ்ரீ **M.சுவாமிநாதன்**
திருவாரூர். இருப்பு துபாய்

சிவஸ்ரீ **K.சூரிய நாராயணன்**
சாஸ்திரி நகர் அடையார், சென்னை

அன்பர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்!



சிவநெறிச்செல்வர் **T.K.தேவராஜன்**
தேவராஜன் மருத்துவமனை திருமழிசை
சென்னை - 600 104.

சிவநெறிச்செல்வர் **A.பன்னீர்செல்வம்**
திருமழிசை இருப்பு இந்திரா நகர்
சென்னை - 600020.

சிவஸ்ரீ மோகன. ராஜசிம்ம மகேந்திரன்
பெருமாளகரம் - திருவேற்காடு, சென்னை

சிவநெறிச்செல்வர்
M.S.முத்துக்குமார் முதலியார்
மதுரவாயில், சென்னை

சித்தாந்த ரத்தினம் கயிலைமணி,
நூம்பல். சிவஸ்ரீ. R.இராமச்சந்திரன்
தலைவர், திருவாசகப்பேரவை, சென்னை- 29.

அன்பர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்!



திரு. **நடராஜன் கார்த்திகேயன்**
திருவல்லிக்கேணி

பொற்றாளம்
துரை.**ஆறுமுகம்**
மேற்கு மாம்பலம், சென்னை - 33.

திருமதி. **R.விஜயலட்சுமி**
ஜமீன்பல்லாவரம், சென்னை

திருமதி. **M.பானுமதி மாதவன்**
திருவல்லிக்கேணி

டாக்டர் M.V.ஆச்சால் - A.அமர்நாத்
வேலூர்

அன்பர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்!



சிவ சேவா ரத்தினம்
எஸ். கிருஷ்ணமூர்த்தி
ஆடிட்டர் பாண்டிச்சேரி, சென்னை

சித்தாந்த ரத்தினம்
சிவஸ்ரீ V.C.கோபிநாத், ஸ்ரீமாங்களம்
மேனாள் முதுநிலை கணக்கு அதிகாரி
சமூக நலத்துறை புதுசை அரசு புதுவை

திருமதி. கலா (எ) மண்ணாங்கட்டி
அமைச்சக உதவியாளர்
மின்துறை புதுவை அரசு

சித்தாந்த ரத்தினம்
V.செங்குட்டுவன்
கார்த்திகேயன் பேக்கேஜிங்ஸ்,
திருமால் நகர், புதுவை

சித்தாந்த ரத்தினம்
டாக்டர். C.ரவிசங்கர் B.D.S.
சற்குரு பல்மருத்துவ மனை, ஜவகர் நகர்
பாண்டிச்சேரி

அன்பர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்!



பேரா. டாக்டர். N.சந்திரசேகரன்
மேனாள் பேராசிரியர் புனிதஜோசப்
நல்லூர் திருச்சி

பேரா.B.சுவாமிநாதன்
மேனாள் பேராசிரியர் சரஸ்வதி
நாராயணன் கல்லூரி மதுரை

லண்டன் திருமதி கமலாம்பாள்
லண்டன் C.வேதநாராயணன்
லால்குடி, இருப்பு கிழக்குத் தாம்பரம், சென்னை

P.T.T.ராஜன்
தேஜஸ் பவுண்டேஷன், சென்னை - 61
நங்கநல்லூர்.

சிவத்திரு. S.குருமூர்த்தி
ஸ்டாக் போக்கஸ், திருச்சி

சித்தாந்த ரத்தினம்.
டாக்டர். விஸ்வ. ஆறுமுகம்
மேனாள் விஞ்ஞானி CLRI இருப்பு,
கிழக்குத் தாம்பரம், சென்னை

நம்பிரான் அருள் வடிவே போற்றி! நலம்மிக அருள்வாய் போற்றி !
அங்கயற்கண்ணி போற்றி ! ஆனந்த வடிவே போற்றி போற்றி !!



சிவ வடிவங்களில் அன்னை பராசக்தி

சிவபெருமான் எங்கும் நிறைந்து நிற்பவர், தனக்கென ஓர் உருவம் இல்லாமல் உலகிலுள்ள உருவங்கள் எல்லாவற்றையும் தம் வடிவாகவே கொண்டவர். ஆனாலும் அவர், அன்பர்கள் மனம் மகிழப் பல்வேறு தெய்வ வடிவங்களைத் தாங்கி வந்து அருள்பாலிக்கின்றார். அவை சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், கஜசம்ஹாரர் போன்றவைகளாகும். இத்தகைய தெய்வ வடிவங்கள் மகேசுவர வடிவங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

மேலும், அவர் தெய்வ வடிவமாக இல்லாமல் வேடன், வீரன், உழவன் போன்ற எளிய மக்களின் வடிவங்களையும் தாங்கி வந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

அதற்கும் மேலாகப் புண்ணியம் செய்த பறவைகள் விலங்குகளுக்கு அருள் செய்வதற்காக, அவரும் அவற்றைப் போலவே பறவைகள், வண்டுகள் போலவும் உருவம் தாங்கி வருகிறார். இப்படி வரும் வேளையில் அவர் தனியாகவும் தன் தேவியோடும் தேவைப்படும்போது தன் புதல்வர்களோடும் வருகிறார். அவர் கொள்ளும் கோலத்திற்கு ஏற்ப, அம்பிகை தானும் அழகிய மங்கையாகக் கோலம் கொண்டு அவருடன் வருகிறாள்.

அன்பர்கள் இத்தகைய புராணங்கள் போற்றும் சிவனது வீரதீர, அன்புநிறை அருட்கோலங்களைச் சிலைகளாக அமைத்து வழிபடும் போது அவருடன் அம்பிகையையும் சேர்த்தே வழிபடுகின்றனர். இப்படி அமைக்கப்பட்டிருக்கும் அம்பிகையின் கோலங்கள் பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. இதில் தாய்மை, வீரம், பயம், கோபம், ஊடல் போன்ற உணர்ச்சிகள் வெளிப்படுவதைக் காண்கிறோம்.அவற்றைச் சிந்திப்பதாக,"**சிவ வடிவங்களில் அன்னை பராசக்தி**" என்னும் இந்நூல் மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இதில் சிவபெருமானின் மகேசுவர வடிவங்களிலும் அவரது எளிவந்த வான் கருணை வடிவங்களான வேடன், படகோட்டி, மீனவன் போன்ற வடிவங்களிலும் உடன்வரும் பார்வதி தேவியின் எழிற் கோலங்களும் சிந்திக்கப்படுகின்றன.

இந்த இனிய நூல் வெளிவரும் வேளையில், அன்பர்கள் அனைவருக்கும் கற்பகவல்லியும், கபாலீசுவரப் பெருமானும் சகல செல்வ யோக மிக்கப் பெருவாழ்வை நல்கி, எந்நாளும் அவர்களை இன்பமுடன் வாழ்விக்க வேண்டுமென்று அவர்தம் திருப்பாதங்களில் பணிந்து வேண்டுகின்றேன்.

வாழி நலம் சூழ !! **-சிவசுந்தரி**



மகாலிங்கத்தைத் தழுவி மகிழும் மகாதேவி

சைவர்கள் போற்றும் சிவவடிவங்களில் முதன்மையானது சிவலிங்கத் திருமேனியாகும். அருவுருவாய் விளங்கும் இந்த வடிவத்தையே அனைத்து ஆலயங்களிலும் கருவறைக்குள் மூலமூர்த்தியாக வைத்து வழிபடுகிறோம். இதுவே பிரபஞ்சத்தின் இரகசிய வடிவம் என்று போற்றப்படுகிறது.

கருவறைக்குள் சிவலிங்கத்தோடு சேர்ந்ததுபோல் அம்பிகையை அமைக்கும் வழக்கமில்லை. சிவலிங்கம் தனித்த வடிவமாகவே அமைக்கப்படுகிறது. அத்துடன் போகசக்தி எனும் பெயரில் உலோகத்தாலான வடிவமே நிலைப்படுத்தப்படுகிறது.

என்றாலும், புராணங்களை ஒட்டி சிவலிங்கத்தோடு அம்பிகையை இணைத்



துப் பேசப்படும் காட்சிகளைக் கலைஞர்கள் ஓவியமாகவும், சிற்பங்களாகவும் படைத்து மகிழ்ந்துள்ளனர். சிவலிங்கத்தோடு அம்பிகையும் இருக்கும் காட்சிகள் பல கோணங்களில் கலைஞர்களால் சித்தரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அம்பிகை சிவபூசை செய்தல், சிவலிங்கத்தைத் தழுவி மகிழ்தல் போன்ற காட்சிகளில் சிலவற்றைச் சிந்தித்து மகிழலாம்.

சிவபூசை செய்யும் தேவி

முதல் வகையில் அன்னை சிவபூசை செய்யும் காட்சியைக் காண்கிறோம். இதில் உயர்ந்த பீடத்தில் சிவலிங்கம் அமைந்துள்ளது. அதற்குப் பட்டாடைகள் அணிவிக்கப்பட்டு, ஆபரணங்கள் சூட்டப்பட்டுள்ளன. லிங்கத்தின்மீது ஐந்தலைப் பாம்பு குடை பிடித்துக் கொண்டிருக்கிறது. சிவலிங்கத்தின் முன்புறம் அமர்ந்து பார்வதி தேவியார் சிவபூசை செய்கிறாள். அவள் இடது கையில் மலர்க்கூடை ஏந்தி வலது கையால் மலரை எடுத்து அர்ச்சிக்கும் கோலத்தில் காட்சி தருகிறாள்.

சிவலிங்கத்தைத் தழுவி மகிழும் தேவி

இரண்டாம் வகையில் பார்வதிதேவியார் அலங்கரிக்கப்பட்ட சிவலிங்கத்தை மார்புறத் தழுவி மகிழும் கோலத்தில் காட்சி தருகிறார்.

ஒரு சமயம் பார்வதிதேவியார் விளையாட்டாக, சிவபெருமானின் கண்களை மூடினார். சூரிய, சந்திரர்களாக இருக்கும்

அக்கண்கள் மூடப்பட்டதால் பிரபஞ்சம் ஒளி இழந்து இருண்டது. உயிர்கள் பயந்து நடுங்கி பெருந்துன்பத்தை அடைந்தன.

சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணைத் திறந்தார். அதனால் ஒளி உண்டான போதிலும், பெரும் வெப்பம் தோன்றி எங்கும் பரவியது. அதனால் உயிர்கள் மேலும் அச்சமடைந்து அவதிக்குள்ளாயின.


பார்வதி தேவியார் தன் கைகளை அகற்றினார். சூரிய, சந்திரர் முன்போலவே பிரகாசித்தனர். உலகம் இயல்பான நிலைக்குத் திரும்பியது. உயிர்கள் ஒளியையும் இதமான சூழலையும் திரும்பப் பெற்றதால் மகிழ்ச்சி அடைந்தன.

சிவபெருமான் பராசக்தியை நோக்கி, "நீ,விளையாட்டாகச் செய்த செயலால் உலக உயிர்கள் அனைத்தும் பெருந்துன்பத்தை அடைந்தன. அதனால் உனக்குப் பாவம் உண்டானது. அது நீங்க, நீ பூவுலகம் சென்று சிவ வழிபாடு செய்க" என்றார். அன்னை பூமிக்கு வந்து கேதாரம், காசி முதலான தலங்களில் சிவபூசை செய்து வழிபட்டவாறே காஞ்சியை அடைந்தாள்.

காஞ்சியில் புனிதம் மிகுந்த இடமான கம்பை ஆற்றங்கரையை அடைந்தாள். அங்கு வேதங்களே பெரிய மாமரமாக வடிவெடுத்து செழித்து வளர்ந்திருந்தன. அந்த இடம் அவள் மனத்திற்கு இதமாக இருந்தது.

அவள் மனதில், அந்த இடத்தில் அப்போதே சிவபூசை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. உடனே மரத்தடியில் இருந்த கம்பை ஆற்றின் தூய வெண் மணலைக் குவித்துச் சிவலிங்கம் ஆக்கினாள். மலர்களைப் பறித்து வந்து சூட்டி வழிபாடு செய்யத் தொடங்கினாள்.

அவ்வேளையில், சிவபெருமான் அவளுக்கு அருள்புரிந்து கயிலைக்கு அழைத்துக் கொள்ள விரும்பினார். அவளது அன்பை வெளிப்படுத்தக் கம்பை ஆற்றைப் பெருகச் செய்தார். வெள்ளம் பெருகுவதைக் கண்ட பார்வதிதேவியார் அஞ்சித் தாம் வழிபட்டுக்




காஞ்சிபுரத்தில் கம்பையாற்றங் கரையில் மாமரத்தடியில் அம்பிகை மணலால்செய்து வழிபட்டுத் தழுவி மகிழ்ந்த லிங்கமே இந்நாளில் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் கருவறையில் மூல மூர்த்தியாக இருப்பதாகும்.

இந்த லிங்கத்திற்கு இப்போது கவசம் அணிவிக்கப்பட்டுள்ளது. சிறப்பு நாட்களில் இந்த லிங்கத்தைத் தழுவி மகிழும் கோலத்திலான அம்பிகையின் வடிவத்தை உடன் வைத்து,பூஜை வழிபாடுகள் செய்கின்றனர்.

கொண்டிருக்கும் சிவலிங்கத்தினைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

அவளது இறுக்கமான அணைப்பால் பெருமான் நெகிழ்ந்தார். அதனால் அவரது திருமேனி குழைந்து மென்மையானது. பார்வதியின் முலைகளும், வளையல்களும் அதில் இறுக்கமாகப் பதிந்து அவரது திருமேனியில் தழும்புகளை உண்டாக்கின.



அதனால் அவருக்கு "முலைத்தழும்பும் வளைத் தழும்பும் பெற்ற பிரான்" என்பது பெயராயிற்று.

சிவபெருமான், கம்பை ஆற்றின் வெள்ளத்தை அடங்கச் செய்தார். அந்தச் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவளுக்கு அருள்புரிந்தார். பின்னர் தேவர்கள் கண்டு மகிழத் திருமணம் செய்துகொண்டார்.

அம்பிகை சிவலிங்கத்தைத் தழுவி மகிழும் கோலத்தைக் கருவறையில் வைத்து வழிபடப்படுவது இல்லை என்றாலும் தென்னகத்துக் கோயில்கள் அனைத்திலும் சுதைச் சிற்பமாகவும் தூண் சிற்பங்களாகவும் அக்காட்சி இடம்பெறுகின்றது.

கம்பையாற்றங்கரையில் நிகழ்ந்த நிகழ்ச்சியாதலின், இதனை **கம்பா நதிக் காட்சி** என்றும், **சிவஆலிங்கனக் காட்சி** என்றும், மாமரத்தின் அடியில் நடைபெற்றதால் **மாவடிக் காட்சி** என்றும் அழைக்கப்படுகின்றது.

நவராத்திரியில் அம்பிகைக்குச் செய்யப்படும் அலங்காரங்களில் இந்த கம்பா நதிக் காட்சியும் ஒன்றாக இருக்கிறது.

வடதமிழகக் கோயில்களில் பெருங்கோயில்களில் மட்டுமின்றி காளியம்மன், மாரியம்மன், அங்காளம்மன் போன்ற சக்தி ஆலயங்களிலும் கம்பாநதிக் காட்சி அலங்காரம் சிறப்புடன் செய்யப்படுகிறது.

கயிலாச கௌரி

கயிலை மலைமீது உள்ள பொன் மண்டபத்தில் மகாலிங்கம் இருக்கிறது. தேவர்கள் எல்லோரும் அந்த மகாலிங்கத்தைப் பூசை செய்கின்றனர். அன்னை பராசக்தியும் அந்த மகாலிங்கத்தை ஆகமவழி நின்று அர்ச்சிக்கிறாள். அந்த லிங்கத்தை ஆரத் தழுவி மகிழ்கிறாள்.

அந்தக் காட்சியை நினைவூட்டும் வகையில் அமைந்ததே கயிலாசகிரி கௌரி வடிவமாகும்.

இதில் கயிலைமலை பெரியதாகக் காட்டப்பட்டுள்ளது. கயிலை மலையை மா கூர்மம் எனப்படும் ஆமையும் நாகங்களும் தாங்குகின்றன. கயிலைமலையின் முன் புறம் இராவணன் கயிலை மலையைத் தூக்கும் பாவனையில் இருக்கிறான்.

மலைமீது மகாலிங்கம் இருக்கிறது. அதற்கு ஐந்தலை அரவு குடை பிடிக்கிறது. அதன்மீது வெண்கொற்றக்குடை இருக்கிறது. மகாலிங்கத்தைப் பார்வதி தழுவி மகிழ்கிறாள். இப்படி சிவபெருமானைத் தழுவி நிற்கும் பார்வதிக்கு கௌரி என்பது பெயர். கிரிராஜன் மகளாக இருப்பதால் அவள் கௌரி என்று அழைக்கப்படுகிறாள்.



கயிலாசமலை மீது விளங்கும் மகாலிங்கத்தைப் பூசித்துத் தழுவி மகிழும் பெண் ணாக இருக்கும் காட்சியை கயிலாச கௌரி என்று அழைக்கின்றனர்.

இலங்கையில் உள்ள நயினார் தீவில் உள்ள நாகபூஷணி அம்மன் கோயிலில் கயிலாச கௌரியின் படம் வெளியிடப்பட்டுள்ளது. நெடுங்காலமாக இப்படம் இக் கோயிலுக்கு உரியதாகவே போற்றப்படுகிறது. இப்போது அக்கோயிலில் உள்ள திருக்குளத்தின் நடுவில் இந்தக் காட்சி பெரிய சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

இங்கே, கோட்டோவியத்தில் காண்பது நமது ஓவியர் சித்தரிக்கும் கயிலாச கௌரி வடிவமாகும். இது நயினார் தீவு நாக பூஷணி அம்மன் கோயில் வெளியிட்ட படத்தை ஒட்டியே வரையப்பட்டதாகும்.

பிரபஞ்ச சக்தி லிங்கம்

இந்தப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன் எங்கும் பரந்துபட்ட எல்லையற்ற வெட்ட வெளியே இருந்தது. பரசிவம் உலகைப் படைக்க வேண்டும் என்று எண்ணியது. அந்த எண்ணம் மெல்லிய வெண்மையான ஒளியாக வெளிப்பட்டது. அந்த ஒளியே பராசக்தியாகும்.

அந்த பராசக்தியின் மடியில் இருந்து சிவலிங்கம் வெளிப்பட்டது. அந்த லிங்கத்திலிருந்து சதாசிவர் தோன்றினார். அவர் ஆதி விருட்சத்தைத் தோற்றுவித்தார். அதனடியில் சக்தியிலிருந்து வெளிப்படும். சிவலிங்கத்தினை வழிபட்டார். சதாசிவரிடமிருந்து பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், மகேசுவரர் போன்றோர் வெளிப்பட்டு, உலகைப் படைத்து நிலைப்படுத்தி வழி நடத்தி வருகின்றனர்.


இந்த ஆதிசிவசக்தி லிங்கத்தை உணர்த்தும் சிற்பம் ஒன்று தாரமங்கலத்தில் உள்ளது. அதையே இங்கே காண்கிறோம்.

இதில் அம்பிகையே சிவலிங்கத்திற்கு ஆவுடையாராக இருக்கிறது. அவளது வயிற்றிலிருந்து சிவலிங்கம் தோன்றுகிறது. அதற்கு ஆதி ஆலமரம் நிழல் பரப்புகிறது. அந்த லிங்கத்தை சதாசிவன் அர்ச்சிக்கின்றார். இந்த லிங்கத்தை ஆதிபராசக்தி லிங்கம் என்பர்.

சக்திமுற்றக் காட்சி


கம்பாநதியில் வெள்ளம் பெருகி வரக் கண்ட பார்வதி, தாம் வழிபட்ட லிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டதை மேலே கண்டோம். அந்தக் காட்சியைச் சற்றுவிரிவுபடுத்திச் சிவலிங்கத்தின் பாணப் பகுதியில், கன்னமும் மார்பும் பொருந்தும்படி ஆவுடையார் மீது முழங்கால் பதிய தாவி அணைக்கும் கோலத்தில் அம்பிகையை அமைத்துள்ளனர். இந்தக் காட்சியைச் சக்தி முத்தம் எனவும் அழைக்கின்றனர்.

சோழநாட்டின் பழம்பெருமை மிக்க தலங்களில் ஒன்றான பழையாறை பட்டீச்சரத்தின் அங்கமாக இருப்பது திருச்சக்தி



முற்றம் என்பதாகும். இது சக்திமுத்தம் எனத் திரிந்து வழங்குகிறது. இந்தப் பெயருக்கு ஏற்பக் கலைஞன் ஒரு அற்புதமான சிவசக்தி வடிவத்தை அமைத்துள்ளான். அந்த வடிவமே சக்திமுத்தக்காட்சி என வழங்குகிறது.

அம்பிகை சிவலிங்கத்தின் மீது தாவி அதைத் தழுவி கொண்டிருக்கும் சக்தி முத்த



செப்பேடுகள், தலபுராணக் காட்சிகளில் அம்பிகையும் சிவலிங்க மூர்த்தியும் அடுத்தடுத்து உள்ள இரண்டு விமானங்களில் எழுந்தருளி இருக்கக் காண்கிறோம். பெரும்பாலான தல புராணக் காட்சிகளில் சிவலிங்க மூர்த்தியையும் அடுத்ததாக அம்பிகையையும் இணையாகவே அமைத்துள்ளனர்.

தென்மாவட்டங்களில் சில வகுப்பினர் அணியும் தாலியில் சோமசுந்தர லிங்கமும் மீனாட்சி வடிவமும் இணையாக அமைக்கப்பட்டுள்ளன.

திருக்கோலம் திருச்சுத்திமுற்ற ஆலயத்தில் தனிச் சந்நிதியில் வைத்து வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

அன்னையின் நிழல்தோன்றும் அற்புதலிங்கம்

இதுவரை கலைஞர்கள் படைத்த சக்தியோடு கூடிய சிவலிங்கத்தைக் கண்டோம். இப்போது சிவலிங்கத்தில் அம்பிகையின் வடிவம் தோன்றும் அற்புத லிங்கத்தைக் காணலாம்.

கள்ளக்குறிச்சியில் இருந்து திருக்கோயிலூர் செல்லும் சாலையில் ரிஷிவந்தியம் என்னும் தலம் உள்ளது. இத்தலத்தில் பெரிய சிவாலயம் உள்ளது. இந்த ஆலயத்தில் இருக்கும் சிவலிங்கம் அழகியதும் அற்புதமானதும் ஆகும். இந்த லிங்கத்திற்குத் தேன் அபிஷேகம் செய்தால் அந்தத் தேன் பாணப் பகுதியில் வழிந்தோடும்போது அம்பிகையின் நிழல் உருவம் தோன்றுகிறது. இந்திரன் இந்த லிங்கத்தை வழிபட்டபோது அவனுக்கு அர்த்தநாரீசுவர



நாதேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

சிவலிங்கத்தில் தேன் அபிஷேகத்தின் போது அம்பிகையின் நிழல் உருவம் தோன்றும் அதிசயம் இப்போதும் தொடர்கிறது.

காஞ்சிபுரம் மகா காளேஸ்வரர் ஆலயத்தில் சிவலிங்கத்தின் பாணப் பகுதியில் காளிதேவி அமர்ந்துள்ளதைக் காண்கிறோம். இதுவும் வேறெங்கும் இல்லாத காட்சியாகும்.

ஓங்கார நாயகி

மகாகவி காளிதாசன் அம்பிகை அழ கிய கிளியாகவும், ஆடும் மயிலாகவும் விளங்குவதை

ஓங்கார பஞ்சர சுகீம் உபநிஷத்
உத்யான கேளீ கலகண்டீம்
ஆகம விபின மயூரிம்ஆர்யாம்
அந்தர் விபாவயே கௌரீம்

என்னும் ஸ்லோகத்தில் குறிக்கின்றார். இந்தச் சுலோகத்தின் பொருள் : ஓங்காரம் என்னும் கூட்டில் வாழ்கின்ற கிளியாக இருப்பவளும் பெரிய மலர்ச் சோலையில் பாடிக் களிக்கும் குயிலாகவும், ஆகம சோலையில் ஆடி மகிழும் மயிலாகவும் இருக்கிறாள் என்பதாகும்.



அபிராமிபட்டர்,

குயிலாய் இருக்கும்
கடம்பாடவியில்
கோல வியன்
மயிலாய் இருக்கும்
இமயாசலத்திடை
வந்துதித்த
வெயிலாய் இருக்கும்
விசும்பில்
கமலத்தின் மீது
அன்னமாம் அன்று
கயிலாயருக்கு
இமவான் அளித்த
கனங்குழையே.

என்றும் போற்றுவதைக் காண்கிறோம்.

மகேசுவர வடிவங்களும் பார்வதி தேவியும்

சிவபெருமானும் பார்வதியும் பிரிக்க முடியாத சக்திகளாக இருக்கின்றனர். அவர்கள் மலரும் மணமும் போலவும், மணியும் ஒலியும் போலவும் பிரிக்க முடியாதவர்கள். என்றாலும் அன்பர்களுக்கு அருளச் சிவபெருமான் தனியாகவும், தன் தேவியோடும் வருகிறார். அவர் தெய்வ வடிவுடன் மகேசனாகத் தோன்றும் வடிவங்களை மகேசுவர வடிவங்கள் என்று அழைக்கின்றோம். மகேசுவர வடிவங்களைப் பூஜாபத்ததி நூல்கள் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.

சிவாகமங்களில் சிவபெருமானின் ஐந்து முகங்களில் இருந்தும் வெளிப்பட்ட மகேசுவர வடிவங்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. மகேசுவர வடிவங்களில் சிவபெருமான் தம் தேவியுடன் காட்சி தருகிறார். அந்தத் தேவியின் பெயர்களை ஆகம வழி வந்த நூல்கள் சிறப்புடன் குறித்துள்ளன.

இங்கே சிவபெருமானின் ஐந்துமுகங்களில் இருந்து வெளிப்பட்டு, அருள்பாலிக்கும் மகேசுவர வடிங்களின் பெயர்களும் அந்த வடிவங்களில் இடம் பெற்றுள்ள தேவியின் பெயர்களையும் காணலாம்.



ஈசானமுகம்

1. சோமாஸ்கந்தர் - புத்திர சௌபாக்ய பிரதாயினி
2. நடராஜர் - சம்பத் யோகப் பிரதாயினி
3. ரிஷபாரூடர் - தர்மசித்தப் பிரதாயினி
4. கல்யாணசுந்தரர் - சர்வதா மங்களப் பிரதாயினி
5. சந்திரசேகரர் - தனதான்யப் பிரதாயினி

தத்புருஷமுகம்

6. பிட்சாடனர் - யோக்ஷித் ப்ரந்த விமோசனி
7. காமாரி - மோகா விக்னா விநாசினி
8. காலாரி - சர்வாரிஷ்ட விநாசினி
9. சலந்தராரி - துஷ்ட விநாசினி
10. திரிபுராந்தகர் - ஜன்ம ஜராமிருத்யு விநாசினி

அகோரம்

11. கஜசம்ஹாரர் - பிராவி சாரஷ்மணி
12. வீரபத்திரர் - சத்ரு வித்வேஷ்நாசினி
13. தட்சிணாமூர்த்தி - மேதாப்பூஞா பிரதாயினி
14. கிராதர் - சற்குணாம்பாள்
15. நீலகண்டர் - விஷதோஷப் பிரணாசினி

வாமதேவ முகம்

16. கங்காளர் - சர்வபாபப் பிரணாசினி
17. சக்கரதானர் - காத்யாயனி
18. கஜாந்திகர் - சர்வசித்தப் பிரதாயினி
19. சண்டேச அனுக்கிரகர் - மகாபாதகணநாசினி
20. ஏகபாதர் - மகாரோக விநாசினி

சத்யோஜாத முகம்

21. லிங்கோற்பவர் - மோட்சப் பிரதாயினி
22. சுகாசனர் - தர்ம, அர்த்த காமமோட்சப் பிரதாயினி
23. உமாமகேசர்- பார்ய சௌபாக்யப் பிரதாயினி
24. ஹரிஹரர் - தர்மா தத்தாயினி
25. அர்த்தநாரி - சர்வ சௌபாக்யப் பிரதாயினி

மகேசுவர வடிவங்களில் உமாதேவியார்

சிவபெருமான் உருவமற்றவராகவும், ஒளிப்பிழம்பாகவும், உருவமும் அருவமும் அல்லாத மகாலிங்கமாகவும், மான், மழு ஏந்தி அபய, வரத முத்திரை தாங்கிய தெய்வ வடிவங் கொண்டவராகவும் பல்வேறு நிலைகளில் காட்சிதருகிறார். அன்பர்கள் தத்தம் தகுதிக்கேற்ற வகையில் அவருடைய உருவத்தை உருவ வடிவம், அருவ வடிவம், அருவுருவ வடிவம் எனப் பலவகைகளில் ஏற்றுப் போற்றி வருகின்றனர்.

அவர் தெய்வ வடிவுடன் தோன்றும் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், கஜசம்ஹாரர் போன்ற வடிவங்களை அன்பர்கள் மகேசுவர வடிவங்கள் என்று போற்றுகின்றனர். மகேஸ்வர வடிவங்கள் எண்ணற்றதாக இருந்தாலும், அவற்றுள் இருபத்தைந்தைச் சிறப்பித்துப் போற்றி வழிபடுகின்றனர். இவை சிவபெருமானின் ஐந்து முகங்களில் இருந்தும் ஐந்துஐந்தாக வெளிப்பட்டதாகக் கூறுகின்றனர்.

இவற்றில் பெரும்பாலானவற்றில் சிவவடிவுடன் உமையன்னையும் சேர்த்தே வழிபடப்படுகிறாள். அவள் சிவபெருமானின் வடிவுக்கு ஏற்பத் தானும் சிறப்புப் பெயர் கொள்கிறாள். அவற்றை இங்கே சிந்திக்கலாம்.


சோமாஸ்கந்தர்

சோமாஸ்கந்தர்

இந்த வடிவில் ஒரே ஆசனத்தில் சிவனும் பார்வதியும் சுகாசனத்தில் அமர்ந்திருக்க, அவர்களுக்கு நடுவே இரு கரங்களிலும் தாமரை மலரை ஏந்திக் குதித்தாடும் கோலத்தில் முருகன் குழந்தை வடிவில் காட்சி தருகிறான்.


இந்த வடிவில் இருக்கும் அம்பிகை உமை எனப்படுகிறாள். உமையன்னையின் பெயராலேயே இவ்வடிவம் சோமாஸ்கந்தர் எனப்படுகிறது. இதற்கு (ஸக+உமா+ஸ்கந்தர்) உமையோடும் முருகனோடும் கூடியிருப்பவர் என்பது பொருளாகும்.

இதில் உள்ள அம்பிகை வலது காலை மடித்து, பீடத்தில் கிடத்தியும் இடது காலைத் தொங்கவிட்டும் காட்சி தருகிறாள்.

சில வடிவங்களில் இவள் வலது கரத்தில் மலர் ஏந்தி, இடது கரத்தில் வரத முத்திரை கொண்டவளாகக் காட்சி தருகிறாள்.

சில வடிவங்களில் வலது கரத்தில் சிம்மகர்ண முத்திரையுடன் இடது கரத்தைப் பீடத்தில் ஊன்றி அமர்ந்துள்ளாள்.

பெரும்பாலான சோமாஸ்கந்த வடிவங்களில் இவள் வலக்கண்ணால் சிவபெருமானையும் இடக்கண்ணால் அன்பர்களையும் பார்க்கும் விதத்தில் திரும்பி அமர்ந்துள்ளாள். இது அன்பர்களைப் பரசிவத்தில் நிலைபெறச் செய்யும் நிலையைக் குறிக்கும் என்பர். அன்னையின்அருட்துணைகொண்டே சிவத்தை அன்பர்கள் அடைய முடியும் என்ற சித்தாந்தக் கருத்தை இந்நிலை தெரிவிப்பதாகக் கூறுவர்.



உமா மகேசுவரர்

பாண்டியநாட்டுத் தலங்களில் உள்ள அம்பிகை நம்மைப் பார்க்காமல் முழுவதுமாகத் திரும்பிச் சிவபெருமானை நோக்கியவாறு அமர்ந்தவளாகவே காட்சி தருகிறாள். இது அவள் அவருடைய ஆணையை நோக்கி, சதாகாலமும் சிந்தித்திருக்கும் நிலையைக் குறிக்கும் என்பர்.

அப்பர்சுவாமிகள் "**வாக்கே நோக்கிய மங்கை**" என்று கூறுவதைக் குறிக்கும் வகையில் அமைந்த வடிவம் இது என்பர்.

இராமநாதீச்சரம் என்னும் தலத்தில் உள்ள சோமாஸ்கந்தர் வடிவம் பெரியதாகும். இதில் உள்ள அம்பிகை இடது கரத்தைப் பீடத்தில் ஊன்றியுள்ளார். அந்த கரத்தின் கீழ் இடப வடிவம் படுத்த நிலையில் இருக்கிறது.

உமா மகேசுவரர் (கௌரிசங்கரர்)

முன் சொன்ன சோமாஸ்கந்தர் வடிவில் நடுவில் ஸ்கந்தர் இல்லாமல் உமையும் சிவனும் மட்டும் உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருக்கும் கோலமே உமாமகேசுவரர் வடிவம் ஆகும். பெருந்திருவிழாக்களின் முடிவில் சிவனையும் உமையையும் ஒரே ஆசனத்தில் அமர்த்தி, அதனை உமாமகேஸ்வர கோலம் என்று சிறப்பித்துக் கொண்டாடுகின்றனர்.

பெரும்பாலும் உமாமகேசுவர வடிவங்களில் உமையும் சிவனும் ஒரே பீடத்தில் அமர்ந்திருப்பவராகவே காட்டப்படுகின்றனர். சில இடங்களில் சிவபெருமானின் மடிமீது அமர்ந்திருப்பவளாகவும் உமையை அமைத்துள்ளனர். இந்த வடிவத்தையும் உமாமகேசுவரர் என்றே அழைக்கின்றனர். இதில் உமை வலது கையில் சிவபெருமானைத் தழுவிக்கொண்டு

இடது கையில் மலர் ஏந்தியவாறு காட்சி அளிக்கிறாள்.

தென்னாட்டில் உமையை மடிமீது அமர்த்திக்கொண்டு அமர்ந்திருக்கும் சிவ பெருமானை உமாமகேசுவரர் என்கிறோம். இதே வடிவம் வடநாட்டில் கௌரிசங்கரர் என்று அழைக்கப்படுகிறது. இந்த வடிவத்தை கௌரிவல்லபர், கௌரி மனோகரர் என்றும் அழைக்கின்றனர்.

கௌரிசங்கரர் எனப்படும் உமாமகேசுவரர் வடிவம் மூலவராக அமைந்திருப்பதை உத்திரகோசமங்கை ஆலயத்தில் உள்ள நடராஜர் சந்நிதியில் இருக்கும் மகேந்திரமலை ஆலயத்தில் காண்கிறோம்.

உமாமகேசுவர வடிவத்தை உமா தேவிக்கு ஆகமங்களை உபதேசிக்கும் ஆச்சார்ய கோலமாகக் கொள்கின்றனர்.

சிவபெருமான் உயிர்களுக்கு இன்பத்தை வழங்குவதால் பவன் எனப்படுகிறான்.

பவனின் தேவியாக இருப்பதால் அம்பிகைக்குப் பவானி என்பதும் பெயராயிற்று. பவானியை மடிமீது அமர்த்திக்கொண்டு இன்பதில் ஆழ்ந்தவராக உலக உயிர்களுக்கு இன்பமூட்டும் வடிவம் பவானி சங்கரர் என்று அழைக்கப்படுகிறது.



சந்திரசேகரர்

இவ்வடிவில் சிவபெருமான் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். மேற்கரங்களில் மானும் மழுவும் திகழ, முன் கரங்கள் அபய வரத முத்திரைகளைத் தாங்கியுள்ளன. (சில வடிவங்களில் இடது கையில் வரத முத்திரைக்குப் பதிலாக இடது கையைத் தொடை மீது வைத்த கோலத்திலும் அமைக்கப்பட்டுள்ளார்)

சந்திரசேகரப் பெருமானின் இடப் பாகத்தில் இருக்கும் அம்பிகைக்கு இந்து சேகரி என்பது பெயர். தட்சனது சாபத்தால் தனது கலைகள் அழிய அதனால் வருந்திய சந்திரனுக்கு அபயம் அளித்து, சிவனருளைப் பெறச் செய்தவள் என்பதால், அவள் இந்துசேகரி எனப்படுகிறாள்.

சிவபெருமான் சந்திரசேகரனாக இருக்கையில் அதில் பொங்கும் அமுதமாக அன்னை இருக்கிறாள். அதனால் அமுதவல்லி என்றும் **அமுதாம்பிகை** என்றும் அழைக்கப்படுகிறாள்.

பெரும்பாலும் சந்திரசேகரர் வடிவங்களில் சிவபெருமானும் அம்பிகையும் தனித்தனியே நின்ற வடிவில் காட்சி தருகின்றனர். சில தலங்களில் அம்பிகையைச் சிவபெருமான் தழுவி நிற்கும் கோலத்தில் அமைத்துள்ளனர். **சிவபெருமானைத் தழுவிடும் மகாதேவர்** எனவும் அம்பிகையைத் "**தழுவிட மகிழும் மங்கை**" எனவும் அழைப்பர்.



நடராஜர்

நடராஜருடன் எழுந்தருளி இருக்கும் அம்பிகைக்கு சிவகாமசுந்தரி என்பது பெயர். பெரும்பாலும் இவள் வலது கரத்தில் நீலோற்பல மலரை ஏந்தி, இடது கையைத் தொங்கவிட்டவாறு காட்சி அளிக்கிறாள்.

சில தலங்களில் தாளம்போட்டுப் பாடிக் கொண்டிருப்பவளாகவும் காட்சி தரு கிறாள்

இடபாரூடர்

சிவபெருமான் அன்பர்களுக்குக் காட்சி தர வரும் போதெல்லாம் இடப வாக னத்தின் மீது அமர்ந்தவாறு வருகிறார். இதனை இடபவாகனக் காட்சி என்பர். மகேசுவர வடிவங்களில் இதுவே உயர்ந்த தாகப் போற்றப்படுகிறது. அன்பர்களுக்குக் காட்சிதர உமையோடு விடைமேல் வரும் சிவபெருமானை,

உமையோடும் வெள்ளை விடைமேல்....
ஏருமடவாளொடு இனிது ஏறி..
கயலார் தடங்கண்ணியோடும் எருதேறி....
தம் காதலியும் தாமும் உடனாய்
தனியோர் விடைஏறி....
மடவாள் தனோடும் விடைஏறும்
எங்கள் பரமன்....

என வரும் தேவாரத் தொடர்களில் கண்டு மகிழலாம்.

பெரிய புராணத்தில் சிவபெருமான் நாயன்மார்களுக்குக் காட்சி தந்து அருள் பாலித்த போதெல்லாம் விடையின் மேல் உமையோடும் வந்து அருள்பாலித்ததாகவே கூறப்பட்டுள்ளது. தாராசுரம் ஐராவ தேசுவரர் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள அறுபத்துமூவர் வரலாற்றுச் சிற்பத்தில் ஒவ்வொரு நாயன்மாருக்கும் எதிரில் விடை வாகனத்தில் சிவபெருமான் உமையோடு அமர்ந்து அருள்புரியும் காட்சி செதுக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் அவ்வரிசையில் அறுபதிற்கும் மேற்பட்ட இடபவாகன மூர்த்திகளைக் காண்கிறோம்.


சிறுத்தொண்ட நாயனாருக்கு அருள் செய்ய வந்த வேளையில் மட்டும் அவள் தேவியோடு முருகனுடன் இருக்கக் காட்சி தந்துள்ளார். இதனைச் சேக்கிழார்

மலை பயந்த தையலோடும்
சரவணத் தனய னோடும்

என்ற தொடரால் குறித்துள்ளார். கீழே உள்ள படத்தில் சிவபெருமான் உமை யோடு இடபாரூடராகக் காட்சி தந்து சிறுத்தொண்டர் குடும்பத்தினரை விண்ணு லகிற்கு அழைத்துச் செல்லும் காட்சியைக் காண்கிறோம்

கல்யாணசுந்தரர்

இக்கோலத்தில் அம்பிகை மணப் பெண்ணாகவும், அவரது கரத்தின் மீது தன்



நீலகண்டர் வடிவங்களில் அவரது கழுத்தில் கையை வைத்து அவர் அருந்திய விஷத்தை வயிற்றுக்குள் செல்லாமல் தொண்டையிலேயே நிற்கும்படிச் செய்பவளாகவும் காட்சிதருகிறாள்.

திரிபுராந்தகர் வடிவில் தேர்த்தட்டில் அவளுடன் வீரமங்கையாக விளங்குகிறாள்.

லிங்கோற்பவர், ஏகபாதர், பிட்சாடனர், காமாரி(காமதகனர்) கங்காளர், கஜாந்திகர் போன்ற வடிவங்களில் அம்பிகையை அமைக்கும் வழக்கம் இல்லை என்றாலும் பிட்சாடனருடன் மோகினியை அமைக்கின்றனர்.

கரத்தை வைத்து கன்னிகாதானத்திற்கு நிற்பவளாகவும்,

தனது உள்ளங்கை மீது பெருமானின் வலது உள்ளங்கையைப் பொருந்தக் கரத்தைப் பிடித்துக்கொண்டு பாணிக் கிரகண கோலத்திலும்,

பெருமானின் கையைப் பிடித்துக் கொண்டு தீயை வலம் வரும் கோலத்திலும்,

வலப்புறம் நின்று மணப்பெண்ணாக ஊர்வலம் வரும் கோலத்திலுமாகக் காட்சி தருகிறாள்.

மீனாட்சி கல்யாண வடிவங்களில் கன்னிகாதானம் கோலத்திலும், திருமணஞ் சேரியில் பாணிக்கிரகண கோலத்திலும், திருவீழிமிழலையில் மணமகனோடு மண ஊர்வலம் செல்பவளாகவும் அவளைக் கண்டுமகிழ்கிறோம்.

கஜசம்ஹார வடிவங்களில் அவள் பெருமானை விட்டு அஞ்சி அகன்று ஓடுபவளாகவும், வேடனாக வந்த வேளையில் அழகிய வேடுவச்சியாகவும்,

மற்றைய வடிவங்களில் சிவபெருமானின் அருகில் அமர்ந்தவளாகவோ நிற்பவளாகவோ காட்சி தரும் அம்பிகை அர்த்தநாரீசுவரர் வடிவில் அவருடைய இடப் பாகத்தில் பாதி அங்கமாகவே இருக்கிறாள்.

ஹரிஹரர் வடிவில் அவருடைய வலப் புறம் உமாதேவியும் இடது பக்கம் மகா லட்சுமியும் இருக்கக் காணலாம்.

இப்படி சிவபெருமானின் கோலங்களுக்கு ஏற்ப, உமையும் அழகிய மங்கையாக உடன் வந்து காட்சிஅளிப்பதைப் புராணங்களும் தோத்திரப் பாடல்களும் விரிவாகக் கூறுகின்றன. அவற்றைத் தம் கற்பனைத் திறனால் கண்டு சிற்பக் கலைஞர்கள் மேன்மைமிகு சிற்பங்களாகப் படைத்து அளித்துள்ளனர். அவை கல்லிலும் செம்பிலும்வாழும் காவியங்களாக விளங்கி வருகின்றன.

நவரசம் காட்டும் நாயகி

வாழ்வில் மனித மனம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அடுத்தடுத்து நடைபெறும் செயல்பாடுகள், சிந்தனை ஓட்டங்கள், சந்திக்கும் மனிதர்கள், இடத்தின் சூழல் போன்ற எண்ணற்ற காரணங்களால் அதில் கணந்தோறும் சலனம் ஏற்படுகிறது. அதன் காரணமாகப் பல்வேறு உணர்ச்சிகள் தோன்றுகின்றன. அந்த உணர்ச்சிகள் உடம்பில் வெளிப்படுகின்றன. குறிப்பாக முகமானது உள்ளத்து உணர்ச்சிகளைக் காட்டும் கண்ணாடியாக இருக்கிறது. இதனால் மனம் கடுத்துத் திரிவதை அடுத்துக் காட்டும் முகம் என்று பெரியோர் குறித்தனர்.

மனத்தின் மலர்ச்சியால் முகத்தில் சிரிப்பு மலர்கிறது. பிரகாசம் உண்டாகிறது.



கோபம் உண்டாகும் போது கண்கள் சிவக்கின்றன. உடல் நடுங்குகிறது. பயம் உண்டாகும் போது உடல் வேர்க்கிறது. முகம் இருண்டு விடுகிறது. இப்படியே மனதில் தோன்றும் உணர்ச்சிகள் யாவும் உடலில் வெளிப்படுகின்றன. இந்த உணர்ச்சிகளின் வெளிப்பாட்டைத் தமிழ் இலக்கியங்கள் மெய்ப்பாடு என்று கூறுகின்றன. மெய்யில் தோன்றும் வெளிப்பாடு என்பதால் அது மெய்ப்பாடு எனப்பட்டது.

ஒரே சமயத்தில் மனத்தில் எண்ணற்ற உணர்ச்சிகள் ஒருசேரக் கூடிக் கொட்டம் அடிப்பதையும் காண்கிறோம். அவ்வளவு உணர்ச்சிகளுக்கும் தனித்தனியே பெயர் கொடுக்க முடியாது என்பதால், இவற்றைத் தமிழில் எட்டாக வகைப்படுத்தி உள்ளனர்.

இவை காமம், இழிப்பு, உருத்திரம், வியப்பு, அச்சம், வீரம், நகை, கருணை என்பனவாகும். வடமொழியில் இவற்றோடு சாந்தி என்பதை ஓர் மெய்ப்பாடாகக் கொண்டு ஒன்பதாகக் கூறுவர்

வடமொழியில் மனதில் உண்டாகும் உணர்ச்சி வேறுபாட்டால் உடலில் தோன்றும் மெய்ப்பாடுகளை ரஸங்கள் என்பர். இவை ச்ருங்காரம்(காதல்), வீரம், கருணை, அற்புதம், ஹாஸ்யம், பயம், பீபத்ஸம் (அருவருப்பு),ரௌத்ரம்(கோபம்), சமம் (அமைதி)சாந்தி என்று அழைக்கப்படுகின்றன.

நாட்டிய சாத்திர நூல்களில் இந்த நவரசங்களின் இயல்புகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளதோடு, அவற்றை வெளிப்படுத்தும் முறைகளும் விவரிக்கப்பட்டுள்

என. பரத நாட்டியக் கலைஞர்கள் தமது ஆடலில் இந்த நவரசங்களையும் முகத்திலும் உடலிலும் வெளிப்படுத்தி, நடனம் ஆடுகின்றனர்.

மனிதர்கள் மட்டுமின்றி, தெய்வங்களும் பலவகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் திருக்கோலங்களில் தோன்றி அருள்பாலிக்கின்றனர். சிவபெருமான் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் வடிவங்களில் கருணையையும், கஜசம்ஹாரர் போன்ற வீரட்டகாச கோலங்களில் வீரத்தையும் கோபத்தையும், திரிபுராந்தர் வடிவில் புன்னகையையும் வெளிப்படுத்துகிறார்.

சிவபெருமானுடன் வீற்றிருக்கும் அம்பிகையான அன்னை பராசக்தியும் நவரசங்களை வெளிப்படுத்துவதை சிவபெருமானின் உன்னத வடிவங்களான மகேசுவர வடிவங்களில் காண்கிறோம்.

சோமாஸ்கந்தர் வடிவங்களில் அவள் மகிழ்வுடன் வீற்றிருப்பவளாகவும், அவரது திருவாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளைக் கேட்டு உள்ளம் களிப்பவளாகவும் இருக்கிறாள். கஜசம்ஹார வடிவங்களில் அவள் அச்சத்துடன் அவ்விடத்தை விட்டு வெளியேறுபவளாகக் காட்சி தருகிறாள். கங்காவிசர்ச்சன மூர்த்தத்தில் அவள் பெருமானிடம் ஊடல் கொண்டவளாக இருக்கிறாள். கங்காதரர் வடிவில் அவள் சிவபெருமானின் ஆற்றலைக் கண்டு வியந்து நிற்பவளாகக் காண்கிறோம். திரிபுரசம்ஹாரத்தில் அவள் வீரமங்கையாகக் காட்சி தருகிறாள்.

சிவபெருமான் தோன்றும் கோலங்களுக்கு ஏற்ப, அவளும் தன் மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கோலத்தில் காட்சி தருகிறாள்.

மெய்ப்பாடுகளான ரசங்களை வெளிப்படுத்துவதில் கண்களுக்கு முதன்மை இடம் உள்ளது. கோபத்தில் அது சிவக்கும். துவள்கையில் கண்ணீர் சிந்தும். அமைதியில் மூடிக்கொள்ளும். வியப்பில் விரியும் என அது பலவகையாகக் காட்சிதரும். இவற்றை விழிபேசும் மொழிகள் என்பர்.

ஆதிசங்கர பகவத்பாதர் சௌந்தர்ய லகரியில் அம்பிகையின் கண்கள் எண்வகை (சாந்தியைத் தவிர்த்து) மெய்ப்பாடுகளையும் வெளிப்படுத்துவதை ஒரு பாடலில் குறித்துள்ளார். சௌந்தர்ய லகரியின் தமிழாக்கத்தில் வேம்பத்தூர் கவிராஜ பண்டிதர் அருளிச் செய்துள்ள அப்பாடலைக் காணலாம்.

அரனிடத்தில் பேரன்பும் அருளும்
அவன் அல்லார்பால்
அருவறுக்கும்; அவன் முடிமேல்
அணிநிதியைச் சீறும்;
பரவுநுதல் விழியை அழல்முன்
பார்த்திலபோல் அதிசயிக்கும்;
பணியாய பணிவெகுளப் பயந்தன
போல் ஒடுங்கும்;
விரைமுளரிப் பகை தடிந்து வீர
ரதம் படைக்கும்
வினவு துணைச் சேடியர்க்கு
விருந்து நகை விளைக்கும்
இரவு பகல் அடிபரவும் எளியேனைக்
கண்டு அருள் புரியும்
இத்தனையோ படித்தன உன்
இணை விழிகள் தாயே.

சிவபெருமானிடத்தில் அமர்ந்து, அவனைப் பார்க்கையில் பேரன்பான கனிவு நிறைந்த காதலையும், அவனது அடியார்களாக இல்லாமல் கீழ்மைக் குணங்களோடு திரிவாரைக் காணும் போது அருவறுப்பையும், அவன் தலைமீது அமர்ந்து கொண்டு முகம் காட்டும் கங்கையைக் கண்டு கோபத்தையும், சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து வெளிப்படும் நெருப்பை முன் எப்போதும்

பார்க்காதது போல் கண்டு அதிசயிப்பதையும், அவன் அணிந்துள்ள பாம்புகள் கோபம் கொண்டு சீறுவதைக் கண்டு அஞ்சி (பயப் பட்டு) ஒடுங்குவதையும், தாமரை மலரை உவமையாகத் தன் கண்களுக்குக் கூறுவத னைக் கேட்டு வீரத்தையும், தன் சேடிகள் கேட்கும் கேள்விகளுக்குச் சிரிப்புடன் கூடிய பதிலைத் தரும் போது சிமிட்டலையும் இரவும் பகலும் உன்னைத் தொழுது நிற்கும் அடியேனுக்கு அருள்புரிவதுமாக உனது இரண்டு விழிகளும் பலவகையான மெய்ப் பாடுகளை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன என்று கூறுவதைக் காண் கிறோம்.

இப்படியே அடியவர்கள் பலரும் அம்பிகையின்மெய்ப்பாடுகளைப் பெரிதும் புகழ்ந்துள்ளனர். அவற்றை உள்வாங்கிக் கொண்ட சிற்ப ஓவியக் கலைஞர்கள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையாகக் கொண்டு ஓவியமாகத் தீட்டியுள்ளனர். கலை நுணுக் கம் கொண்ட சிற்பங்களாக வடித்துள்ளனர்.

ராஜாரவிவர்மா தனது கங்கை அவத ரண ஓவியத்தில் சிவபெருமானின் விரித்த சடையில் கங்கைவந்து குதிப்பதைப் பார்வதி தேவி, காளை வாகனத்தில் சாய்ந்த வாறு அண்ணார்ந்து வியப்புடன் பார்ப்ப தனை அற்புதமான ஓவியமாகத் தீட்டியுள் ளார்.

சிவபெருமான் விஷ்ணுமோகினியுடன் ஆடிமகிழ்வதை மறைவில் நின்று அன்னை பராசக்தி பார்த்து அழுது கண்ணீர் சிந்து பவளாகக் கேரளக் கலைஞர்கள் சித்தரித் திருப்பதைக் குருவாயூர் கோயிலில் பார்க்கி றோம்.

உமாமகேசுவர வடிவங்களில் சிவ பெருமான் உபதேசிக்கும் ஆகமப் பொருளை வியந்து கேட்டுக் கொண்டிருப்பவளாகவும்,



நடராஜர் வடிவங்களில் அருகில் நின்று தாளம் போட்டு ரசிப்பவளாகவும், அவரது ஊர்த்துவ தாண்டவத்தைக் கண்டு முக வாயில் கைவைத்து வியப்பவளாகவும் பல கோலங்களில் அவளைச் சிற்பங்க ளாகப் படைத்துள்ளனர்.

அவள் தவக்கோலத்தில் எல்லையற்ற தோர் ஆனந்தம் வெளிப்படும் அமைதி தவழும் திருமுகத்துடன் விளங்குகிறாள். அதையொட்டி அவளைச் சாந்த நாயகி என்று அழைக்கின்றனர். அவள் தன் மெய்ப் பாடுகளுக்கேற்பப் பெயர் பெற்றுள்ளதை ஒரு வடமொழி சுலோகத்தில் காண்கி றோம்.

போகேச பவானி புருஷேஷு விஷ்ணு
குரோகேச காளி சமரேச துர்க்கா

என்னும் அந்த சுலோகத்தில் அன்பைப் பொழிபவளாக அரனிடத்தில் வீற்றிருக்கும் போது அவள் பவானி எனப்படுகிறாள். உலகைக் காத்து அருளும் கோலத்தில்

அவள் விஷ்ணு எனப்படுகிறாள். அரக்கர்களைப் பார்த்துக் கோபித்து கண்சிவக்க ஆயுதங்கள் ஏந்திச் செல்லும் போது காளி எனப்படுகிறாள். போரில் தீமையை அழித்து வெற்றியைப் பெற்று வெற்றிக் களிப்பால் புன்னகை ததும்பும் முகத்துடன் வீரமங்கையாக இருக்கையில் துர்க்கை எனப்படுகிறாள் என்று கூறப்படுகிறது.

அம்பிகை ஆனந்த வல்லியாக இருப்பது போலவே அதிசய வடிவுகொண்டு நவரசம் சொட்டக் காட்சிதரும் நாயகியாகவும் இருப்பதை, பாரத தேசமெங்கும் வழங்கும் இலக்கியங்களிலும் சிற்ப ஓவியங்களிலும் பரவலாகக் காண்கிறோம்.


தொடர்ந்து வரும் பக்கங்களில் சிவபெருமானுடன் வீற்றிருக்கும் அம்பிகையின் நவரச பாவங்களை அருட்கோலங்களைச் சிந்தித்து மகிழலாம்.

நாகலோகப் பெண்ணாக பார்வதி

சிவ-சக்தி வழிபாட்டில் நாக வழிபாடு இணைந்தே இருக்கிறது. சிவ சக்தியரின் ஆபரணங்களாகப் பாம்புகள் திகழ்கின்றன. சிவ,சக்தியரே பாம்பு வடிவில் உறையும் தலங்கள் பல உள்ளன.

நாகர் உலகம் பாதாளத்தில் இருக்கிறது. அங்கு அனந்தன், ஆதிசேடன் என்ற பல ஆயிரம் பாம்பரசர்கள் வாழ்கின்றனர்.

அனந்தனின் வேண்டுகோளை ஏற்று பார்வதி நாகலோகத்தில் அழகிய குழந்தையாகத் தோன்றினாள். அனந்தன் என்னும் பாம்பரசன் அவளை எடுத்து வளர்த்தான். அவளுக்கு **அனந்தகௌரி** என்பது பெயராயிற்று.



சிவபெருமான் நாகர்குல அரசனாகத் தோன்றி, அவளை மணந்து கொண்டார். இருவருக்கும் இடையே விநாயகர் அழகிய குழந்தையாகத் தோன்றினார்.

சிவ பார்வதியர் நாககுமாரனாகவும், நாக இளவரசியாகவும் இருக்கும் புடைப்புச் சிற்பம் ஏகாம்பரநாதர் ஆலயத் தூண் ஒன்றில் இருக்கிறது. இருவரும் விநாயகரை ஏந்தி சீராட்டும் கோலத்தில் இருக்கின்றனர். நாகர்குலப் பெண்ணாக விளங்கும் அம்பிகைக்கு நாகவல்லி என்பதும் பெயராகும்.

சிஷ்யபாவ கௌரி

ஆகமங்களை அண்ணல் உபதேசிக்க, கேட்டு மகிழும் அன்னை

சிவாகமங்களைச் சிவபெருமான் ஆதியில் உமையன்னைக்கே அருள்செய்தார். அவளே சிவபெருமானின் முதல் சிஷ்யை ஆவாள். அவளுக்கு உபதேசம் செய்த வேளையில், அவற்றை அறுபத்து அறுவர் கேட்டு பூமியில் வெளிப்படுத்தினர். அவர்களில் முப்பதின்மர் சிவர் என்றும், முப்பத்து அறுவர் உருத்திரர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். சிவர்களால் வெளிப்படுத்தப்பட்ட ஆகம நூல்கள் சிவ பேதம் என்றும், உருத்திரர்களால் வெளிப்படுத்தப்பட்டவை உருத்திரபேதம் என்றும் அழைக்கப்படுகின்றன.



சிவபெருமானிடம் வேதங்களையும் ஆகமங்களையும் கேட்டு மகிழும் அன்னைக்கு வேதவல்லி என்றும், ஆகமசுந்தரி என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

சிவபெருமானிடமிருந்து குருசிஷ்ய பரம்பரையைத் தோற்றுவித்தவள் ஆதலால் அவளை முதல் சிஷ்யை என்று அழைக்கின்றனர். சிஷ்யபாவத்துடன் விளங்கும் கௌரிதேவியை சிஷ்யபாவ கௌரி என்று சிற்பநூல்களும் பத்ததி நூல்களும் கூறுகின்றன.

சிஷ்யபாவ கோலம் என்பது இடது கையை மடக்கி, வலது முழங்கை முட்டியில் வைத்து, வலது கையால் வாயைப் பொத்திக் கொண்டு, கேட்பதில் ஆர்வமுடன் ஆழ்ந்த சிந்தனையில் லயித்தவாறு கண் மூடிக் கொண்டிருக்கும் நிலையைக் குறிப்பதாகும். அம்பிகையை அக்கோலத்தில் அமைத்து வழிபடுகின்றனர். இது வடநாட்டு வழக்கம். தென்னாட்டில் இரு கரம் கூப்பி அஞ்சலி செய்தவாறு இருக்கும் வகையில் அம்பிகையை அமைத்து வழிபடுகின்றனர்.

சிவபெருமானின் இடது மடி மீது அமர்ந்து இருகரங்களையும் கூப்பியவாறு ஆகமங்களைக் கேட்டு மகிழும் கோலமே சிஷ்யபாவ கௌரி கோலமாகும்.

உத்தரகோசமங்கை என்னும் தலத்தில் சிவபெருமான் உமையன்னைக்கு ஆகமங்களை உபதேசித்து அருள்புரிந்ததாக அவ்வூர்த் தல வரலாறு கூறுகிறது. இதை நினைவுகூரும் ஐதீகக் கோயில் ஒன்று அவ்வாலயத்தில் இருக்கின்றது.

உத்தரகோச மங்கையில் புகழ்பெற்று விளங்கும் மங்களநாதர் ஆலயத்தில் தலத்திற்குப் பெருமை சேர்க்கும் மரகத நடராஜர் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் முகமண்டபத்தின் மேற்கில் கட்டுமலை ஒன்று உள்ளது. இதனைச் சுற்றி நீராழி பத்தி உள்ளது. கட்டுமலை மீது ஏறிச் செல்லவும், இறங்கி வரவும் தனித்தனியே படிக்கட்டுகள் இருக்கின்றன.

இந்த மலை மகேந்திரமலையைக் குறிக்கும் ஐதீகக் கட்டுமானமாகும். மகேந்திரமலை மீது அமர்ந்தே சிவபெருமான் அம்பிகைக்கு வேத, ஆகமப் பொருளை உபதேசித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

திருவாசகத்தில் மணிவாசகர், **மன்னுமா மலை மகேந்திரம் அதனில் சொன்ன** ஆகமம் தோற்றுவித்தருளியும் என்று அருளிச் செய்திருப்பது இங்கு எண்ணத் தக்கதாகும்.

இங்குள்ள கட்டுமலை மீது சிறிய ஆலயம் ஸ்ரீ விமானத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. அதில் சிவபெருமான் தன் இடது மடிமீது உமாதேவியை அமர்த்திக் கொண்டு ஆகமங்களை உபதேசிக்கும் கோலத்தில் காட்சி தருகிறான்.



குரு வடிவான கௌரி

சிவபெருமானிடம் தாம் பெற்ற வேத ஆகம ஞானங்களைத் தமது அன்பர்களுக்கு உபதேசிக்கும் கோலமே குரு வடிவான கௌரி என்று அழைக்கப்படுகிறது.

சிவனடியார்கள் சப்த குருமார்கள் என்னும் வரிசையில் அம்பிகை, ஸ்ரீகண்டர், ஸ்கந்தர், மகாவிஷ்ணு, பிரம்மா என்னும் எழுவரைப் போற்றுகின்றனர்.

சாக்த தந்திரத்தில் அம்பிகை குருவாகப் போற்றப்படுகிறாள். அவள் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து உபதேசிக்கிறாள். அவளை **கௌரி தட்சிணாமூர்த்தியாகப்** போற்றுகின்றனர்.


இவள் மேற்கரங்களில் பாசாங்குசம் தாங்கி, முன் வலதுகை சின்முத்திரை காட்ட, இடது கையில் சுவடியை ஏந்திய கோலத்தில் காட்சிதருகிறாள்.

மணமகளாக மகாதேவி

(மணக்கோலத்தில் நாணத்துடன் திகழும் நம்பிராட்டி)

மானுட வாழ்வில் திருமணம் என்பது இல்லற வாழ்வின் தொடக்க விழாவாக அமைகிறது. ஒரு பெண்ணும் ஆணும் திருமணம் என்னும் பந்தத்தினால் தம்பதியர் ஆகிய இல்லறத்தைத் தொடங்கு கின்றனர். இல்லறத்தாலேயே உலகம் செழிக்கிறது. வம்சம் விருத்தியாகிறது. இல்வாழ்வு என்பது ஒரு அறமாகக் (தர்மமாகவே) கூறப்பட்டுள்ளது.

இல்லறத்தான், வேதம் ஓதுதலான பரம்ம யக்ஞம், பதுர்ளைக் குறித்து செய்யும் பதுர் யக்ஞம், தேவதைகளைக் குறித்து செய்யும் தேவ யக்ஞம், காவல் தெய்வங்களாக வழிபடும் பூத யக்ஞம் அதிதிகளுக்கு விடுவதான மானுடயக்ஞம் என்றும் ஐம்பெரும் கடமைகளைச் செய்ய வேண்டும். அதனால் இந்த உலகம் மேன்மை அடைகிறது.



வேதங்களும் புராணங்களும் உயிர் மோட்சத்தை அடைய வேண்டிப் பயணிக்க வேண்டும் என்று **இல்லறமல்லது நல்லறமன்று** என்று பெரியோர்கள் குறித்தனர்.

உயர்ந்த குணவதியான பெண்ணைப் பெறுவதும் அவனைத் தக்க இடத்தில் திருமணம் செய்து கொடுப்பதும் மேன்மை மிக்க பூர்வ புண்ணியத்தாலேயே விளைகிறது.

அன்னை உமாதேவியார் மண்மேல் வந்து மகிமை பெற்றவர்களுக்கு மகளாக வளர்ந்ததையும், உரிய வேளையில் சிவபெருமான் தோன்றி அவளுக்கேற்ற மணமகனாக வந்து மணம் செய்து கொண்டதையும், பின்னர் அனைவரும் காணதெய்வ வடிவுடன் அருள்பாலித்ததையும் புராணங்கள் அழகாகச் சித்தரிக்கின்றன.

மலையசரன் இமவான் மகளாகத் தோன்றி, கயிலைநாதனைக் கணவனாகப் பெற்ற பார்வதி தக்கனின் மகளாகப் பிறந்து தாட்சாயணி எனும் பெயரில் வளர்ந்து சிவபெருமானை மணந்து கொண்டதைச் சிவபுராணமும் கந்தபுராணமும் கூறுகின்றன.

மண்மேல் வந்து மதுரையில் மன்னன் மகளாக வளர்ந்து பாண்டியனாக வந்த சிவபெருமானை அவள் மணந்து கொண்ட



வடிவில் காட்சியளித்துள்ளனர். எனவே, பார்வதியின் மணக்கோலம் என்பது பல வகையாக அமைகிறது.

இவற்றுள் மணமகள் மகிழ்ச்சியாலும் வெட்கத்தாலும் (நாணத்தாலும்) தலை குனிந்து புன்முறுவல் விளங்க, பிரகாச மான முகத்துடன் இருப்பது மட்டும் பொது வாக இருக்கிறது. இங்கே அம்பிகையின் இரண்டு திருமணக் காட்சிகளைக் காண் கிறோம். முதலாவது வடக்கலத்தூர் என்னும் ஊரில் இருந்த மணக்கோலநாதர் வடிவமாகும்.


இரண்டாவது வடிவம் அருங்காட்சி யகத்தில் இருப்பதாகும். இரண்டிலுமே அன்னை பார்வதி வெவ்வேறு அலங்காரக் கோலத்தில் இருப்பதைக் காணலாம். இரண்டிலும் அவள் முகத்தில் நாணம் இழையோடுவதைக் காண்கிறோம்.



கதையை மீனாட்சி கல்யாணம் என்று கொண்டாடுகின்றனர்.

இப்படியே அவள் திருவீழிமிழலை யில் கார்த்தியாயன முனிவருக்கு கார்த்தியா யினியாகவும் திருவேட்டக்குடியில் பரத முனிவரின் மகளாகப் பார்வதியாகவும், தென்பாண்டிக் கடற்கரையில் பரதர் குலத் தில் பார்வதியாகவும் தோன்றியதையும் உரிய பருவத்தில் சிவபெருமான் அவளை மணந்து கொண்டதையும் தலவரலாறுகள் தெரிவிக்கின்றன.

இந்த வரலாறுகளில் அவள் தோன்றிய குடிக்குஏற்ப மணமகளாக அலங்காரம் செய்து மணம் செய்து கொடுக்கப்பட்ட தையே காண்கிறோம். திருமணத்திற்குப் பிறகே பரமனும் பார்வதியும் தெய்வ



எல்லோராகுகையில் உள்ள பாணக்கிரகண கோல உமையும் சிவனும்,
பிரமன் மணவேள்வி வேட்க, சிவபெருமான் உமையின் கரத்தைப் பிடித்து நிற்கிறார். வலப்புறம் திருமகளும் திருமாலும் நிற்கின்றனர். மேலே இடபத்தில் ஈசானன், ஆட்டின் மீது அக்னி, மானின் மீது வாயு, நரவாகனத்தில் நிருதி, யானை மீது இந்திரன், மகரத்தின் மீது வருணன், எருமை மீது யமன் ஆகிய அட்டதிக்குப் பாலகர்களுடன் சூரியன் உஷா, ஆகியோர் திருமணத்தைக் காண வருகின்றனர்.

பாணிக்கிரகண கோலங்களில் அவள் சிவபிரானின் கையைப் பற்றிக் கொண்டு நடப்பவளாகவும், தாரை வார்க்கும் கோலங்களில் சிவபெருமானின் கைமீது தன் கையை வைத்திருப்பவளாகவும்,

சப்தசதி சடங்குகளில் பெருமானின் கையைப் பற்றிக் கொண்டு தீயை வலம் வருபவளாகவும் திருமணம் முடிந்து வாழ்த்து அருளும் வேளையில் அவரோடு உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பவளாகவும் அவளைக் காண்கிறோம்.




பார்வதி பரமேசுவரர் திருக்கல்யாணங்களில் மீனாட்சி கல்யாணம் மிகவும் புகழ் பெற்றதாக இருக்கிறது. இதனை தேவர்குழாத்துடன் பெரிய ஓவியமாகவும் சுதைச் சிற்பங்களாகவும் பல இடங்களில் அமைத்துள்ளனர்.

ஆலயங்களில் கல்யாணசுந்தரர் என்னும் பெயரில் உலாத் திரு மேனிகளின் தொகுதிகள் அமைக் கப்பட்டு வழிபடப்படுகின்றன.

சிவனின் ஆற்றலைக் கண்டு வியந்து நிற்கும் பார்வதி

சிவபெருமான் எல்லையற்ற ஆற்றல் கொண்டவர். அவரால் ஆகாதது எதுவும் இல்லை. அவரது ஆற்றலைக் கண்டு வியந்து நிற்கும் அன்னை பராசக்தியைப் பல காட்சிகளில் காண்கிறோம். அவற்றில் இரண்டை இங்கே சிந்தித்து மகிழலாம்.

கபிலமுனிவரின் சாபத்தால் எரிந்து சாம்பலாகிப் போன சகர புத்திரர்களான



ஆயிரவரை சாபத்திலிருந்து விடுவித்து மோட்சம் பெற வைக்க, அவர்கள் வம்சத்தில் வந்த பகீரதன் பெரிதும் முயன்றான்.

வானத்திலிருக்கும் கங்கையைப் பூமிக்கு வரவழைத்து, அவளைப் பாதாளத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு குவியலாகக் கிடக்கும் அவனது முன்னோர்களின் எலும்புகளையும், சாம்பலையும் நனைத்தால் அவர்கள் மோட்சம் பெறுவார்கள் என்பதை அறிந்தான்.

தனது கடுந்தவத்தால் கங்கையை மகிழ்வித்தான். அவள் அவன் முன்னே தோன்றினாள்.

அவளிடம், "அன்னையே! என்னுடன் வந்து எம் முன்னோர்களின் சாம்பலையும் எலும்பையும் உமது அலைக் கரத்தால் தழுவி ஆசீர்வதித்தால் அவர்கள் மேன்மை பெறுவார்கள். எமது முன்னோர்களை மோட்சம் அடைய வைக்க வேண்டும். அதுவே என் விருப்பம்" என்றான்.

கங்காதேவி, "பகீரதா! உன் விருப்பப்படியே பூமிக்கு வந்து பாதாளத்திற்குச் செல்லலாம். ஆனால் பூமியின் மீது நான் குதித்தால் அந்த வேகத்தைத் தாளாது பூமி சிதறிவிடும். அதனால் பூமிக்குத் துன்பம் வராமல் நான் குதிக்கும் போது என்னைத் தாங்கிப் பிடித்துப் பூமியில் விடத்தக்க ஏற்பாட்டைச் செய்துவிட்டுச் சொல். நான் உடனே புறப்பட்டு வருகிறேன்" என்றாள்.

பகீரதன் தேவர்களிடத்தில் சென்று "கங்கையைத் தாங்கிப் பிடித்துப் பூமியில் விடத் தக்கவர் யார்?" என்று கேட்டான். அவர்கள் "திருமால், பிரமன் போன்றவர் களாலும் கங்கையின் வேகத்தைத் தாங்க முடியாது. அவளைத் தாங்கிப் பிடித்துப் பூமியில் விடத்தக்கவர் சிவபெருமானே" என்றனர்.

பகீரதன் சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் மேற்கொண்டான். அவனது தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவன் முன்னே தோன்றினார். பகீரதன், "அவரிடம் கங்கையைத் தாங்கிப் பிடித்துப் பூமியில் விட வேண்டும் என்று விண்ணப்பித்தார்."



சிவபெருமான் "அப்படியே ஆகட்டும். எனது சடையை விரித்துப் பிடிக்கிறேன். அதில் அவளைக் குதிக்கச் சொல், பூமிக்குத் துன்பம் இல்லாமல் அவளை ஏந்தி, பூமி யில் தவழ விடுகிறேன்" என்றார்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்ட பகீரதன், கங்கையைச் சந்தித்து, சிவபெரு மான் கூறியதைக் கூறினான்.

கங்கை பூமிக்கு வருவதற்கான ஒரு நல்ல நாள் குறிக்கப்பட்டது. அந்நாள் வந்தது. கங்கை தயாரானாள். தேவர்கள் வானில் கூடினர்.

சிவபெருமான் கயிலை மலையில் ஒரு பாறை மீது நின்றார். தனது இடது கையால் தனது ஒற்றைச் சடையை விரித்துப் பிடித் தார்.

அதைக் கண்ட கங்கை, "சிவபெருமா னின் இந்த ஒற்றைச் சடையா? என்னைத் தடுத்துவிடும்" என்று எண்ணினாள். "இவரை உருட்டித் தள்ளிவிட்டுக் கடலை நோக்கிச் செல்வேன்" என்று எண்ணியவாறு தாவிக் குதித்தாள்.

ஆனால், அவள் சிவபெருமானின் சடை யில் இருந்த ஒற்றை மயிரின் நுனியில் பனித்துளியைப் போல் அவள் நின்றாள். அவளது கர்வம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. சிவபெருமான் அப்படியே அந்தச் சடையை எடுத்துச் சுற்றிக் கொண் டார். அவள் அவரது சடைக்குள் சிறைப் பட்டாள்.

வானிலிருந்து அவள் குதிக்கும் போது பூமியே சிதறும், அதை எப்படிச் சிவபெரு மான் தடுப்பார், என்பதைக் காணக் கூடி நின்ற தேவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம் உண்டானது. ஆனால் கங்கை அவரது ஒற் றைச் சடைக்குள் சிறைப்பட்டு அடங்கிப் போனதைக் கண்டு வியந்தனர்.

நடந்தவற்றைப் பார்வதிதேவியார் வியப்புடன் பார்த்தார். அவர் ரிஷபத்தின் மீது சாய்ந்தவாறு அண்ணார்ந்து நோக்கும் வகையில் அக்காட்சியைக் கண்டு தன்னை மறந்து நின்றாள்.

இக்கோலத்தை ராஜாரவிவர்மாவின் ஓவியத்தில் காண்கிறோம். விரித்த சடையுடன் சிவபெருமான் நிற்க, கங்கை அதில் வேகத்துடன் குதிக்கிறாள்.

அவரது ஒரு புறம் பகீரதன் கைகளைக் கூப்பி நிற்கின்றான். மறுபுறம் பார்வதி தேவியார் இடபத்தின் மீது சாய்ந்தவாறு வியப்புடன் அந்தக் காட்சியைக் காண்கிறாள். ரிஷபமும் வியப்புடன் அக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

பார்வதி சிவபெருமானின் ஆற்றலைக் கண்டு வியந்து நிற்கும் மற்றோர் காட்சியினைத் திருவாலங்காட்டில் காண்கிறோம்.

திருவாலங்காட்டில் காளிதேவியின் கர்வத்தை அடக்க, அவளுடன் சிவபெருமான் நடனமாடுகிறார். அந்த ஆட்டத்தின் நடுவே அவரது காதிலிருந்த குழை நழுவிக் கீழே வீழ்ந்தது.

பெருமான் தனது இடது காலால் அதை எடுத்து அணிந்து கொண்டார். அவரைப் போல் காலை உயர்த்தி ஆட முடியாததால் காளிதேவி தோற்றாள்.

சிவபெருமான் காலைத் தூக்கி வானில் உரசும்படி உயர்த்தி ஆடும் அந்த ஆட்டம் "**அண்டமுறு நிமிர்ந்தாடும் ஆனந்தக் கூத்து**' " என்று அழைக்கப்படுகிறது. அவர் இடதுகாலை உயர்த்தி, ஆகாயத்தைத் தொடுவது போல் ஆடும் அந்த ஆட்டத்தைக் கண்டு பார்வதி தேவி வியந்து நிற்கிறாள்.

திருவாலங்காட்டில் இரத்தின சபையில் அண்டமுறு நிமிர்ந்தாடிக் கொண்டிருக்கும் நடராஜருக்கு இடப் பாகத்தில் இருக்கும் அன்னை சிவகாமியின் வடிவம்


தியாகராஜர் வடிவங்களில் உமாதேவி



சிவபார்வதியர் குமரனுடன் வீரசிங்காதனத் தில் தியாகராஜர் எனும் பெயரில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருப்பதைத் திருவாரூர் முதலான விடங்கத் தலங்களில் காண்கிறோம்.

இதில் பெருமானும் பெருமாட்டியும் முகத்தை மட்டும் காட்டுகின்றனர். இவர்கள் தம் அங்கங்களை ஆடைஆபரணங்களால் மறைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதிலுள்ள அம்பிகைக்குக் கொண்டி என்பது பெயர். கொண்டி என்பதற்கு இணைப்பது பாதுகாப்பு அளிப்பது என்பது பொருள். சிவராஜயோக வித்தையில் நம்மைச் சிவனோடு இணைக்கும் தெய்வமாகவும் உயிருக்குப் பாதுகாப்பு அளிப்பவளாகவும் இருப்பதால் அவள் கொண்டி என்று அழைக்கப்படுகிறாள்.



அவள் ஆச்சர்யத்து டன் பெருமானின் நடனத்தைக் கண்டு வியந்து நிற்பவளாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இவள் இடதுகரத்தை மடித்து விரல் களை உயர்த்தி முகவாயை வருடியவாறும், வலது கரத்தைத் தொங்க விட்டவாறும் காட்சியளிக்கிறாள். இது வேறெங்கும் இல்லாத வடிவமாகும்.

இது விந்தையான நிகழ்வைக் கண்டு வியந்து நிற்கும் கோலமாகும்.

பார்வதி தேவியின் வடிவங்களில் திரிசூலமும் ஒன்றா கும். அவள் ஆயுத வடிவில் இருக்கும் போது திரிசூல வடி வில் இருக்கிறாள். சிவபெருமான் வடநாட்டு பைரவ னாகக் கோலம் தாங்கி சிறுத்தொண்ட நாயனார் வீட்டிற்குச் சென்று பிள்ளைக்கறியை அமுதாகக் கேட்ட வேளையில் அம்பிகை யை சூல வடிவம் கொள்ளச் செய்து தோளில் தாங்கியவாறு சென்றார் என்று பெரிய புராணம் கூறுகிறது.



ஊடல் கொண்ட பார்வதியும் ஊடலைத் தீர்க்க ஆடிப் பாடும் பரமனும்

இல்வாழ்வில் அடிக்கடி உண்டாகும் சலசலப்புக்களால் உரிமையின் காரணம் பற்றி ஏற்படும் சிறுகோபமே ஊடல் எனப்படுகிறது. பெண்கள் அடிக்கடி ஏதாவது காரணத்திற்காகக் கோபம் கொள்கின்றனர். அக்கோபத்தை மாற்ற அவளது கணவன் அவளுக்கு ஏற்ப இனிய மொழிகள் கூறி, பரிசுகள் கொடுத்து அவளது கோபத்தினை மாற்றித் தீர்க்கிறான்.

பெண்களின் இந்த ஊடல் இல்லற வாழ்வின் சுவையை மேம்படுத்துவதாக இலக்கியங்கள் கூறுகின்றன. ஊடுதலுக்குப் பின்னால் கூடிக் கொஞ்சும் போது ஏற்படும் இன்பம் பல மடங்கு இன்பம் தருவதாக இருக்கிறது. இதனை திருவள்ளுவர்

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப்பெறின்

என்று அருளிச் செய்துள்ளார்.

மானுடவாழ்வில் மட்டுமன்றி தெய்வங்களின் வாழ்விலும் ஊடற்காட்சிகளைக் காண்கிறோம். திருவூடல் என்று தெய்வங்கள் கொள்ளும் ஊடலை மையப் படுத்தி, ஆலயங்களில் ஊடல் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. பெருந்திருவிழாவின் இறுதி நாளிலும், திருவாதிரை நாளிலும் ஊடல் விழாக்கள் நடத்தப்படுகின்றன.

திருவாதிரை நாளில் நடராசரும் சிவகாமியும் வீதிகளில் பவனி வந்த பின்னர் ஆலயம் செல்வதற்குச் சற்று முன்பாக ஊடல் விழா நடத்தப்படுகிறது. அவ்வேளையில் அதுவரை நடராஜரைப்



பின்தொடர்ந்து வந்த அன்னை சிவகாமி விரைந்து முன்னால் சென்று கோவிலுக்குள் சென்று கதவுகளைச் சார்த்தி விடுகிறாள்.

சிவபெருமான் சண்டேசுவரரைத் தூதாக அனுப்புகிறார். அவரிடம் சிவபெருமான் கங்கையைத் தமக்குத் தெரியாமல் தலையில் சூடியிருப்பதையும், சிறிதும் நாணமின்றி தாருகாவனத்து ரிஷிகளின் மனைவிமார் முன் நிர்வாணியாகத் திரிந்ததாலும் மோகினியாக வந்த திருமாலுடன் வனத்தில் திரிந்ததாலும் கோபம் கொண்டுள்ளதாகவும், அவர் மீது மிகுந்த கோபமும் வெறுப்பும் கொண்டுள்ளதாகவும், கூறி அவரைத் துரத்தி விடுகிறாள்.

அவர் சென்று சிவபெருமானிடம் அதைச் சொல்ல, அவர் தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி சுவாமிகளை அழைத்து வரச்செய்து தூது அனுப்புகிறார்.

அவர் அம்பிகையிடம் சென்று " பெருந்தனப் பெண்ணான நீ கோபம் கொள்ளலாமா " எனப் பலவாறு இதமான மொழிகளைப் பேசி அவரைச் சமாதானப்படுத்தினார். அவளது கோபத்தை மாற்றி அழைத்து வந்து சிவபெருமானிடம் சேர்த்து வைத்தார். இந்தக் காட்சியை ஐதீக நாடக விழாவாக நடத்துகின்றனர். இதில் சுந்தரமூர்த்தி சுவாமிகளை எடுத்துச் சென்று ஊடலைத் தீர்க்கின்றனர். ஊடல் தீர்ந்ததும் நடராசர் அவளுக்கு நிலங்களைப் பரிசு அளிப்பதாகவும் கூறுவர். அதனைப் பிடி பாடு என்பர். பிடிபாடாக ஆலயத்தின் சொத்துக்கள் பட்டியலிட்டுப் படிக்கப் படுகின்றன.

சிவபெருமானிடம் அம்பிகை ஊடல் கொண்டதையும் அவளது ஊடலைத் தீர்க்க வேண்டி, ஆடியும் பாடியும் சாமவேதம் ஓதியும் சிவபெருமான் திருவிளையாடல் புரிந்ததைத் தேவாரத்தில் அப்பர் சுவாமிகள்,

சூடினார் கங்கையாளை
சூடிய துழனிகேட்டங்கு
ஊடினாள் அங்கையாளும்
ஊடலை ஒழிக்க ஒழிக்க வேண்டி
பாடினார் சாமவேதம்
பாடிய பாணியாலே
ஆடினார் கெடிலவேலி
அதிகை வீரட்டனாரே

என்னும் பாடலில் குறிக்கின்றார். இந்தத் திருப்பாடலைச் சிற்பக் கலைஞர்கள் கங்கா விசர்ச்சனர் என்னும் மூர்த்தத்துடன் இணைத்து அழகிய சிற்பங்களாக அமைத்துள்ளனர்.

வானுலகத்தில் இருந்து பூமியில் குதித்த கங்காதேவியைத் தாங்கிப் பிடித்து சடையில் ஏற்ற சிவபெருமான் அவளை சடையில் முடித்து வைத்துவிட்டார்.

பின்னர் பகீரதன் வேண்டுகோளை ஏற்று அவளைச் சடையில் இருந்து வெளி விடுத்தார். கங்காவிசர்ச்சனம் எனப்படும் கங்கையை வெளிவிடும் கோலத்தையும் பார்வதியின் ஊடலைத் தீர்க்கும் காட்சியையும் இணைத்து, கலைஞன் ஒரே சிற்பமாக வடித்துள்ளான்.

இக்காட்சியில் அம்பிகை ஊடல் கொண்டு இறுக்கமான முகத்துடன் நடக்கிறாள்.

அவளைத் தொடரும் சிவபெருமான் அவளை முன் இடது கரத்தால் அணைத்துக் கொண்டு, வலதுகரத்தால்,அவளது முகவாயைப் பற்றித் தன் பக்கம் திருப்ப முயற்சிக்கிறார்.

அவரது பின் வலதுகை தன் சடையை விரித்துப் பிடிக்க அதிலிருந்து கங்கை வெளிப்படுகிறாள். அவள் கூப்பிய கரங்க



ளுடன் காட்சி தருகிறாள். பெருமானின் மேல் இடது மேல்கரம் மானை ஏந்துகிறது.

இந்தஇருவரும் அதிக அணிமணிகளுடன் கவர்ச்சியாகக் காட்சி தருகின்றனர். பகீரதனின் வேண்டுகோளை ஏற்று, அவரது சடையில் இருந்து வெளிப்படும் கங்கையைக் கண்டு அன்னை உமாதேவியார் கோபம் கொண்டார். அவ ளது உரிமை பற்றிய கோபம் ஊடலானது. அவளது ஊடலைத் தீர்க்க பெருமான் பலவாறு முயன்றார். இறுதியில் கோபம் நீங்கிய உமாதேவி அவரை அணைத்துக் கொண்டார்.

இதனை கங்காவிசர்ச்சனர் என்றும், ஊடல் கொண்ட காதலர் என்றும் அன்பர்கள் கொண்டாடுகின்றனர். சோழ மன்னர்கள் இக்காட்சியைப் பெரிதும் போற்றினர்.

தஞ்சைப் பெரியகோயில், சிதம்பரம், திருக்கடவூர் மயானம், திருப்பனந்தாள் போன்ற ஆலயங்களில் கருவறைக் கோட்டச் சிற்பமாக இக்காட்சியை அமைத்து மகிழ்ந்துள்ளனர். திருமீயச்சூரில் உள்ள கோட்ட சிற்பமான இக்காட்சியை க்ஷேத்திர புராணேசுவரர் என்று கொண்டாடுகின்றனர்.



தழுவிய மகாதேவர்


நாகர்கோயிலில் தழுவிய மகாதேவர் கோயில் என்னும் கோயில் உள்ளது. இது இந்நாளில் தாடிமார் கோயில் என வழங்குகிறது. ஒரு சமயம் பார்வதி தேவி இங்கிருந்த அன்பரின் மகளாகத் தோன்றி வளர்ந்தாள்.

அவர் தன் தாயுடன் தினமும் பள்ளியறை பூஜைக்கு வருவது வழக்கம். ஒருநாள் சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவளைத் தழுவி அணைத்துக் கொண்டு லிங்கத்தில் மறைந்துவிட்டார். அது முதல் இது தழுவிய மகாதேவர் கோயில் என வழங்குவதாகக் கூறுகின்றனர்.

மகேசன் மடிமேல் அமர்ந்த மலைமகள்
(ச்ருங்கார(காதல்) வடிவம்)

அன்பின் மிகுதியால் கொஞ்சி மகிழும் போது பிரியமாக மடிமேல் அமர்த்திக் கொண்டு கொஞ்சுதல் இயற்கையாகவே அமைகிறது. குழந்தைகள் அன்பின் மிகுதியில் தாயின் மடிமேல் அமர்ந்துகொள்கிறது. காதலன் காதலியை மடிமேல் அமர்த்திக் கொண்டு காதல் மொழி பேசுகிறாள்.

அமரகாதலர்களான பரமேசுவரனும் உமாதேவியும் காதல் கொண்டு மகிழும்



கோலத்தில் இருப்பதை மனக்கண்ணால் கண்டு மகிழ்ந்த கலைஞர்கள். சிவபெருமானின் மடிமீது அமர்ந்தவளாக உமா தேவியை அமைத்து மகிழ்ந்துள்ளனர்.

இந்தக் கோலம் உமாமகேசுவர கோலம் என்ற அழைக்கப்படுகிறது. சிவ பெருமான் வலதுகாலைத் தொங்க விட்டு, இடதுகாலை மடித்து உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்க அவருடைய இடது மடிமீது அம்பிகை வீற்றிருக்கின்றாள். அம்பிகை வலது கையால் இறைவனைத் தழுவிக் கொண்டு இடது கையில் மலர் ஏந்துகிறாள். அவள் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதைக் குறிக்கும் வகையில் கண்ணாடியை ஏந்திய வளாகவும் அமைப்பர்.

சிவபெருமான் மேற்கரங்களில் சூலம், (மழு) மான் ஏந்தி வலக்கை அபய முத்திரை காட்ட, இடது கரத்தால் அன்னையின் இடது மார்பகத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிறார். இதை காதற்கோலம் என்பர். திருவிழா முடிந்ததும் சிவபார்வதியரை ஒரே ஆசனத்தில் அமர்த்தி விழா கொண்டாடுவர். இதற்கு உமாமகேஸ்வர தரிசனம் என்பது பெயர்.


வடநாட்டில் அமைந்துள்ள இத்தகைய வடிவங்கள் கௌரிசங்கரர் என்று அழைக்கப்படுகின்றன.

மகேந்திரமலை மீதிருந்து அன்னைக்கு ஆகமப் பொருளை உபதேசித்த போது மேற்கொண்ட கோலமும் உமாமகேசுவர கோலமே ஆகும். இதைக் குறிக்கும் வகையில் உத்தரகோச மங்கை என்னும்

தலத்தில் நடராசர் சந்நிதியில் கட்டுமலைக் கோயில் ஒன்று அமைக்கப்பட்டு அதன்மீது உமாமகேசுவரர் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலம் எல்லோராவில் அமைக்கப்பட்டுள்ள மகேசுவர வடிவங்களில் அன்னையின் அற்புதமான லீலா விநோதக் காட்சிகளைக் காண்கிறோம். அவள் சிவபெருமானின் மடியில் அமர்ந்திருப்பவளாகவும், ஒய்யாரமாக அவர் மீது சாய்ந்து கொண்டிருப்பவளாகவும், மணமகளாகவும் பல கோலங்களில் காட்சி தருகிறாள்.

இங்கே உள்ள படத்தில் கயிலை மலையில் உல்லாசமாக பார்வதி பரமேசுவரர் அமர்ந்திருக்கும் காட்சியைக் கண்டு மகிழ்கிறோம்.



லலிதா காமேசுவரி

சிவனடியார்கள் சிவசத்தியரை சிவ பார்வதியர் உமாமகேசுவரர், கௌரிசங்கரர் என்றும் போற்றிக் கொண்டாடுகின்றனர். அதுபோல சக்தியை முழுமுதற் தெய்வமாகப் போற்றும் சாக்த வழிபாட்டினர் சிவசத்தியரை லலிதா காமேசுவரர் என்று அழைக்கின்றனர். இதில் பார்வதி லலிதை என்றும், சிவபெருமான் காமேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார். லலிதையை காமேசுவரி எனவும் அழைக்கின்றனர்.

காமேசுவரி காமேசுவரரைப் போலவே கரும்புவில் மலர்ப்பாண, பாச அங்குசம் ஏந்தியவளாகக் காட்சி அளிக்கிறாள். காமேஸ்வரியின் வடிவமே காமாட்சி என்று போற்றப்படுகிறது. இவளை லலிதா பரமேசுவரி எனவும் அழைப்பர். லலிதா காமேசுவரர்கள் சதாசிவபீடத்தில் அமைந்து உயிர்களுக்கு இன்பத்தை வாரி வழங்குகின்றனர்.



இதில் காமேஸ்வரர் மடியில் அமர்ந்திருக்கும் காமேஸ்வரி ஐயனை ஆரத்தழுவி மகிழ்கிறாள்.

தாளம் இடும் பார்வதி

அன்பர்கள் மனம் மகிழச் சிவபெருமான் நடனமாடுகிறார். அவருடைய நடனத்தைக் காண பதஞ்சலி, வியாக்ரபாதர், சங்கபாலன், பத்மன் போன்றவர்கள் அரிய தவங்கள் செய்கின்றனர். அவனது ஆடல் பலவகைப்பட்டது.

அவன் தேவர்கள் தொழும் மன்றத்தில் கந்தர்வர்கள் இசை பாட, தேவர்கள் இசைக் கருவிகள் முழங்க, நடனமாடுகிறான். அவனே பூதங்கள் பாட, பேய்கள் உடன் கூத்தாடச் சுடுகாட்டிலும் நடனமாடுகிறான்.



அவன் பார்வதி காண ஆடுகிறான். அந்த ஆட்டம் அவள் பெயரால் உமா தாண்டவம் என்றும் கௌரி தாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது. தேவாரத்துள் அனேக இடங்களில் சிவபெருமான் உமையவள் கண்டு மகிழ நடனமாடுவது குறிக்கப்பட்டுள்ளது.....

இதனை, **செழுங்கல் வேந்தன் செல்லி காண ஆடி** (திருமுதுகுன்றம்), **பாலொத்த மொழியால் கான ஆடும்** பரமனார் (ஈங்கோய் மலை), **மான் அடைந்த நோக்கி காண மகிழ்ந்தாடும் பிரான்** (சேய்ஞலூர்), **உமை காண ஓங்கி ஆடுவான்** (திருவீழி மிழலை) என வரும் தொடர்களால் அறியலாம்.

உமையவள் அவனது ஆடலைக் கண்டு பேரானந்தம் கொள்கிறாள். ஆட்டத்திற்குத் தாளம் தட்டுவதும் ஜதிகள் சொல்வதும் முக்கியமானதாகும். அம்பிகை சிவபெருமானின் ஆடலுக்கு ஜதிகள் சொல்வதோடு தாளமிட்டும் பாடுகிறாள்.

உமையவள் தாளமிட சிவபெருமான் ஆடல் புரிவதை கொள்ளிக்காடு தேவாரத் தில்

தளர் இள உளர்என உமைபாடத் தாளமிட என்று திருஞானசம்பந்தர் குறித்துள்ளார்.

அவள் பொற்றாளம் தட்டிப் பாடும் கோலத்தைக் கும்பகோணம் திருநாகேசுரத்து ஆலயத்தில் காண்கிறோம். இந்த ஆலயத்தில் உள்ள நடராஜரின் சபை தனிச் சிறப்பு மிக்கதாகும். இது மாடக்கோயில் போலவும். பெரிய தேர் போலவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேரில் பூட்டப்பட்ட பெரிய சக்கரங்களும் கலை எழில்மிக்க குதிரைகளும். தேரை இழுத்துச் செல்லும் பிரம்மாண்ட யானைகளும் பார்ப்போரைப் பரவசப்படுத்துகின்றன.

இந்த ஆனந்த சபையில் பெருமான் ஆனந்த நடராஜராக ஆடிக் கொண்டிருக் கிறார். இவருடைய பக்கத்தில் உள்ள அம்பிகை சிவகாமி பொற்றாளத்தை இரண்டு கரங்களிலும் ஏந்தியுள்ளாள். இது அற்புதமான அன்னையின் எழிற்கோல மாகும். அத்துடன் இந்த சிவகாமியின் திருவுருவம் பெரியதாக இருக்கிறது.


திருஞானசம்பந்தர், காரைக்கால் அம் மையார் ஆகிய இருவரையும் தாளம் ஏந் திப் பாடும் கோலத்தில் அமைக்கின்றனர். அம்பிகையை இங்கு தாளம் ஏந்தியவளாக அமைத்திருப்பது காணற்கினிய காட்சியாக இருக்கிறது.

சிவனார் தாண்டவம் கண்டு மகிழும் பாவை

சிவபெருமான் உமையவள் காண நடனமாடுவது தேவாரத்தில் அனேக இடங் களில் குறிக்கப்பட்டுள்ளது.

உமையவள் கண்டு மகிழ்வதோடு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த புன் முறுவல் பூப்பதை திருநெல்வேலி பதிகத்





தில் காண்தரு மலைமகள் கதிர்நிலா முறு வலை செய்து அருளவே நடமாடல் பேணும் [பிரான்] என்றும் குறித்துள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் உமையவள் காண ஆடிய அழகன் என்று பெரு மானைப் போற்றுகிறார்.

உயர்ந்த பீடத்தில் அன்னை வீற்றிருக்க சிவபெருமான் நடனமாடுவதைக் கலை ஞர்கள் தீட்டியுள்ளனர். உமையவள் காண ஆடிய ஆட்டம் என்பதால் இது உமா தாண்டவம் என்று அழைக்கப்படுகிறது.


கௌரி தேவியான பார்வதி காண நின் றாடிய நடனம் என்பதால் இது கௌரி தாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது.

அம்பிகை கண்டு மகிழச் சிவபெரு மான் நடனமாடுவதைக் கலைஞர்கள் அற்புதச் சிற்பங்களாகப் படைத்துள்ளனர். அத்தகைய சிற்பங்களில் இரண்டை இங்கே காண்கிறோம்.

இதில் மேலே உள்ள சிற்பம் காஞ்சீ புரம் கயிலாயநாதர் கோயிலில் இடம் பெற்றுள்ளதாகும். இதில் அரங்கில் பெரு மான் எண் கரங்களை வீசி ஆடுகிறான். அம்பிகைஅவனுக்கு இடப்புறம் நின்று ஆர்வத்துடன் அவனது ஆட்டத்தைக் கண்டு மகிழ்கிறாள். ஆட்டம் நெடுநேரமாக நடக் கிறது,அம்பிகை காலை மாற்றி வைத்துக் கொள்வதையும் இடபம் படுத்திருப்பதை யும் காணமுடிகிறது. வலப்புறம் கணங்கள் இசைக் கருவிகளை இசைக்கின்றனர்.

பயம் கொண்ட பாவை பராசக்தி

பயம் என்பது அச்சம். அது மனதில் தோன்றும் உணர்ச்சி. தன்னை எதிர்ப்பதை எதிர்ப்பதற்கு இயலாமையால் தோன்றும் உணர்ச்சி. அச்சம் உயிர்களைப் பற்றி வருத்தும் நோய். அரசர்களிடத்தில் பகைவர்கள் அச்சம் கொள்கின்றனர். மக்கள் நோய் , அதிகார பீடம் போன்றவற்றிடமும், கொடிய விலங்குகள், இயற்கைச் சீற்றங்கள் போன்றவற்றிடமும் அச்சம் கொள்கின்றனர். அச்சம்



வலிமை மிக்க பகைவர்களால் தோன்றுகின்றது. அச்சம் அற்ற இடமே மகிழ்ச்சியின் இருப்பிடமாகும்.

பகை ஒழிந்தால் அச்சமும் தானே ஒழிந்து விடும். அச்சத்தாலேயே பல தவறுகள் தொடர்ந்து நடந்து வாழ்க்கை சிக்கலாகி விடுகிறது. அதனால் அச்சத்தை விடுத்து எதையும் எதிர்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். பாரதி **அச்சம் தவிர்** என்கிறான்.

சிவபெருமான் ஒருவனே அச்சம் அற்றவன். அவனது விரோதிகள், பகைவர்கள் எவருமே அவனை வெல்லும் ஆற்றல் பெற்றவர்கள் இல்லை. சிவன் பயத்திற்குப் பயம் அளிப்பவன். அதனால் அதிபயங்கரன் என்று அழைக்கப்படுகிறான்.

அவனது நிழலில் இருப்பவர்க்குப் பயம் என்பது இல்லை. அதனால் அவனது நீழல் அபயம் எனப்படுகிறது.

அவன் தேவைப்படும்போது மற்றவர்க்குப் பயத்தை உண்டாக்குகிறான். இராவணன் கயிலை மலையைத் தூக்கியபோது அவனைப் பயங்கொள்ளச் செய்தான். சிவபெருமான் இராவணனுக்குப் பயம் அளித்ததைத் திருமுறைகள் திரும்பத்திரும்பச் சொல்கின்றன. (அரக்கனுக்கு) **அச்சமும் அருளும் கொடுத்த எம்அடிகள் அச்சிறுபாக்கமது ஆட்சிகொண்டாரே** என வரும் வரிகள் சிந்திக்கத்தக்கதாகும்.

அண்டத்து வாழும் உயிர்களை அச்சப்படுத்துவது போலவே, தன் பங்கில் அமர்ந்திருக்கும் உமாதேவியையும் சிவபெருமான் விளையாட்டாக அச்சப்படுத்துகிறான்.

சிவபெருமான் பெரும்பாம்பை ஏந்தி புஜங்க நடனத்தை ஆடும்போது இடை இடையே அந்தப் பாம்பை அம்பிகையின் மீது காட்டுகிறான். அவள் அஞ்சுகிறாள்.

அவன் தன்னைக் கொல்ல வந்த புலியைக் கொன்று அதன் தோலை உடுத்திக் கொள்வதைக் கண்டு அஞ்சினாள்.

மேலும் தாருகாவனத்து முனிவர்கள் அனுப்பிய யானையின் உடலைக் கிழித்துப் போர்வையாக அணிந்துகொண்ட போதும் அவள் அஞ்சினாள். அவள் அஞ்சி ஓடுவதைக் கண்ட சிவபெருமான் தனது தெற்றிப் பற்கள் தெரியுமாறு சிரித்தார். இதனை அப்பர் சுவாமிகள்,



விரித்தபல் கதிர்கொள் சூலம்
வெடிபடு தமருகம் கை
தரித்ததோர் கோல கால
வைரவன் ஆகி வேழம்
உரித்து உமை அஞ்சக் கண்டு
ஒண் திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே....

கடிய கரியின் தோல் மயில்
ஆர்ந்த சாயல் மடமங்கை வெருவப்
போர்த்தீர்... (பூம்புகலி)

வரு மத களிற்றினை மயங்க
ஒல்லையில் பிடித்து அங்கு உரித்து
அவள் வெறுவல் கெடுத்தவர் (வெங்குரு)

இப்படி அனேக சமயங்களில் சிவபெருமானின் வீரச் செயல்களைக் கண்டு அவள் அஞ்சினாள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

சிலசமயம் சூழலாலும் அவள் அஞ்சினாள். அச்சத்தின் மிகுதியால் அருகில் இருந்த இறைவனைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

ஒரு சமயம் இராவணன் வடபுலத்தை வென்று தென்னாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அந்த வழியில் திருக்கயிலாய மலை இருந்தது. நந்திதேவர் புஷ்பக விமானத்தில் பறந்துவரும் அவனிடம் "உனக்கு வரம் அருளிய சிவபெருமானின்மலையான இந்த மலையின் மீது பயணிக்காதே. மலையை வலமாகச் சுற்றிச் செல்" என்றார்.

தன் வழியை மாற்றிக் கொள்ள விரும்பாத இராவணன், தன் வழியை மறைத்து நிற்கும் அந்த மலையை அடியோடு பிடுங்கி, பக்கத்தில் வைத்துவிட்டுத் தன் பயணத்தைத் தொடர விரும்பினான். உடனே விமானத்தினை விட்டிறங்கி கயிலை மலையை அடியோடு பெயர்த்தான்.



அவனது அடாத செயலால் மலை குலுங்கியது. அதிலுள்ளவர்கள் நிலைதடு மாறி வீழ்ந்தனர்.

உமையவள் அஞ்சினாள். பக்கத்தில் இருந்த சிவபெருமானைத் தாவிஅணைத் துக் கொண்டாள். சிவபெருமான் இராவண னை மலையின் கீழ் அழுத்தி அம்பிகையின் அச்சத்தைப் போக்கினார்.

துணிஉடைய அரக்கன் ஓடி எடுத்தலும்
தோகை அஞ்ச - திருமுறை.- அப்பர்

கலைஞர்கள் கயிலைக்காட்சியை அமைக்கும் போது கயிலைமலையின் கீழ் இராவணனையும், கயிலை மலைமீது சிவ பெருமானையும் அவரை அச்சத்தால் தழு விக் கொண்டிருக்கும் உமாதேவியையும் சேர்த்தே அமைத்து மகிழ்ந்தனர்.

பயத்தால் சிவபெருமானைக் கட்டிப் பிடித்துக்கொள்வதைப்போலவே, பயத் தால் சிவபெருமான் இருக்கும் இடத்தை விட்டு ஓட முயலும் பராசக்தியையும் கலைஞர்கள் படைத்துள்ளனர்.



இங்கே உள்ள படங்களில் இருப்பது தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலில் இருந்து இப்போது தஞ்சை அருங்காட்சியகத்தில் இருக்கும் கஜசம்ஹா ரர் வடிவமாகும். மேலே முழு உருவமாகவும், பக்கத் தில் அதன் கீழ்ப்பகுதி பெரியதாகவும் காட்டப்பட்டு உள்ளன. அம்பிகை பெருமானின் அச்சமூட்டும் வடி வைக் கண்டு வேகமாகப் பயந்து ஓடுவதைக் காண் கிறோம். அந்த வேகத்தால் அவளை இடுப்பில் இருக் கும் முருகன் நழுவி இருப்பதையும் காண்கிறோம். அம்பிகை அஞ்சுவதை அவள் முகக் குறிப்பால் அறிய முடிகிறது. இந்த வடிவில் பெருமானின் முகத்தில் வலப்புறம் மர்மமான புன்னகை தவழ்வதையும் இடப் புறம் கொடுமை குடிகொண்டிருப்பதையும் காண்கி றோம்

மேலே கோலாகல வைரவனாகி சிவ பெருமான் யானையை உரித்தார் என்ற செய்தியையும், அதைக் கண்டுஉமையவள் அஞ்சினாள் என்ற செய்தியையும் பார்த் தோம்அல்லவா? அக்காட்சியைக்கலைஞர் கள் கஜசம்ஹாரர் என்னும் பெயரில் அமைத்துள்ளனர். அக்காட்சியில் உமை அஞ்சி அவ்விடம் விட்டு ஓடுவதாக அமைத்துள்ளனர்.

காஞ்சி கயிலாயநாதர் கோயிலில் காணப்படும் கஜசம்ஹாரர் வடிவம் அற்பு தக் கலைப்படைப்பாகும். இதில் ஆர்ப்ப ரித்து அட்டகாசம் புரிந்தவாறு யானையை அது அலறும்படியாக அதன் தோலை உரிக்கும் சிவபெருமானைக் காண்கிறோம். அத்தொகுதியில் இடம் பெற்றுள்ள அம்பி கை அஞ்சி ஓடுவதைக் கலைஞன் தத்ரூப மாக வடித்துள்ளான். பயத்தில் ஆடை நழுவிவிட அதைப் பிடித்துக்கொண்டே அவள் ஓடுகிறாள். இந்தச் சிற்பம் மிகவும் உயிரோட்டம் உடையதாக அமைந்திருக் கிறது.

வழுவூர் கஜசம்ஹாரர் வடிவில் அவள் பயம்வெளிப்படவில்லை என்றாலும், அவள் அந்த இடத்தைவிட்டுச் செல்லும் பாவனையில் திரும்பிக் கால்களை அடி பெயர்த்து வைத்துக்கொண்டிருக்கிறாள். அவள் இடுப்பில் அமர்ந்துள்ள முருகன் தாவிச் சிவபெருமானைக் காட்டுகிறார்.

இவள் அச்சத்தில் இருப்பதால் இவளது கையில் உள்ள மலர் துவண்டு சாய்ந்து கிடக்கிறது.

திருத்துறைப்பூண்டியில் உள்ள பவ ஔஷதேசுவரர் ஆலயத்திலும் அற்புதமான கஜசம்ஹாரரைக் காண்கிறோம். ஒரே கல் லால் வடிக்கப்பட்ட இந்தத் திருவுருவத்தில் கஜசம்ஹாரருடன் விநாயகர், துர்க்கை, சூரியன், பைரவர் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. இதில் அம்பிகை அஞ்சி ஓடு வதையும், அவள் இடுப்பில் உள்ள முருகன் சிவபெருமானைச் சுட்டிக்காட்டும் கோலத் திலும் அமைத்துள்ளனர்.

பராசக்தி பயமற்றவள் என்றாலும் அன்பர்கள் மகிழ்வடைய பயம் கொண்டது போன்று நடிக்கிறாள். அவள் நமக்குப் பய மற்ற தன்மையை அருளப் பிரார்த்திப் போம்.




சோமாஸ்கந்தரில் அம்பிகை

சோமாஸ்கந்தர் வடிவத்தில் மூவகை நிலையில் அம்பிகை காட்சி தருகிறாள். முதல் நிலை யில் அவருடைய திருமேனியில் வெளிப்படாது மறைந்திருப்பவளாக இருக்கிறாள். இதைக் குறிக்கும் வகையில் பெருமான் இடது காதில் பெண்களுக்கான தோட்டையும், இடது காலில் பெண்களுக்கான சிலம்பையும் அணிந்துள்ளார். இவளை ஞானசக்தி என்பர்.

அடுத்ததாக அவள் வெளிப்பட்டு அவருடைய இடப்பாகத்தில் அமர்ந்திருக்கிறாள். இவளை இச்சாசக்தி என்பர். அடுத்ததாக தனித்து நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள். இவளை கிரியாசக்தி என்பர். சோமாஸ்கந்தர் வடிவில் அமர்ந்தவாறும் நின்றவாறும் இருக்கும் அம்பிகை வடிவங்களைக் காண்கிறோம்.

ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி ஆகிய முப்பெரும் சக்திகளை யோக சக்தி, போகசக்தி, வீரசக்தி எனவும் அழைப்பர்.



வழுவூர் வீரட்டேசுவரர் ஆலயத்திலுள்ள கஜசம்ஹாரர் உலாத் திருமேனி அம்பிகை பெருமானின் வடிவைக்கண்டு அவ்விடத்தை விட்டு அகல்வது போல் கால்களை வைத்துக் கொண்டிருக்கிறாள். அவளது வலது கையில் உள்ள மலர் துவண்டு இருக்கிறது. வலது இடுப்பில் அமர்ந்திருக்கும் முருகன் வலது கையால் பெருமானைச் சுட்டிக் காட்டுகிறார்.

செட்டிப் பெண்ணாக வந்த பார்வதி

வாணிபத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் செட்டியார் என்று அழைக்கப் படுகின்றனர். இறைவன் வளையல் விற்கும் செட்டியாராகவும் கூலவாணிக செட்டியாகவும் பலநேரங்களில் தோன்றி அன்பர்களுக்குக் காட்சி தந்துள்ளார்.

திருவீழிமிழலையில் பஞ்ச காலத்தில் திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் படிக்காசு தந்த பரமன் அவர்களுக்குச் சமைப்பதற்கான பொருட்கள் தாராளமாகக் கிடைக்கத் தானே ஒரு கடையைத் திறந்து வியாபரம் செய்யும் செட்டியாராக அமர்ந்தார்.

அவருடன் அம்பிகை செட்டிப் பெண்ணாக அமர்ந்தாள். செட்டியார் துலாக் கோல்பிடித்து(தராசு) பொருட்களை நிறுப்பவராகவும் அம்பிகை படியைப் பிடித்து தானியங்களை அளந்து போடுபவளாகவும் கோலம் கொண்டனர்.

இக்காட்சியை நினைவூட்டும் வகையில் திருவீழிமிழலைக்கு அருகில் உள்ள மருதஞ்சேரியில் அமைந்துள்ள சிவாலயத்தில் சிவ-பார்வதியர் வடிவங்கள் அமைக்கப் பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

உமை அஞ்சியதைக் கூறும் பதிகம்

அம்பிகை அஞ்சுவது தமிழ் வேத மான தேவாரத்தில் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

இராவணன் ஆணவத்தால் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த போது மலை குலுங்கவே மலை மீது இருந்தவர்கள் நிலை குலைந்து வீழ்ந்தார்கள். உமையவள் அஞ்சித் தாவி சிவபெருமானை அணைத்துக் கொண்டாள்.

அவள் அஞ்சி தன்னை அணைத் துக் கொண்ட செயலைக் கண்டு சிவபெருமான் சிரித்தார். இக்காட்சியைத் தேவாரத்தில் ஆங்காங்கு குறிக்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் தாம் அருளிய திருக் கயிலாய பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் இக்காட்சியைக் குறித்துப் பாடி யுள்ளதைக் காண்கிறோம்.

உனகனாய் அரக்கன் **ஓடி எடுத்தலும் உமையாள் அஞ்ச**...*(1)*,அதிர்ந்து அவன் எடுத்திடலும் **அரிவைதான் அஞ்ச ஈசன்**... *(2)* , கறுத்தவன் கண்சிவந்து கயிலைநல் மலையைக் கையால் மறித்தலும் **மங்கை அஞ்ச வானவர் இறைவன் நக்கு** ..*(3)*, எடுத் தலும் **மங்கை அஞ்ச** இறையவன் **இறையே நக்கு**..*(4)*,வென்றித் தன் கைத் தலத்தால் எடுத்தலும் **வெருவ மங்கை**, நன்று தான் **நக்கு நாதன்**மலையை ஓடி நெளித்தவன் எடுத் திட லும் **நேரிழை அஞ்ச** நோக்கி -*(6)*

எருத்தனாய் எடுத்தவாறே **ஏந்திழை அஞ்ச ஈசன்**- *(7)* **வடிவுடை மங்கை அஞ்ச**- *(8)* கயிலை நல் மலையைப் பற்றி இரியத்தான் எடுத் திடலும்,**ஏந்திழை அஞ்ச ஈசன்** *(9)*, செற்ற வன் எடுத்தவாறே **சேயிழை அஞ்ச ஈசன்** -*(10)*

கஜசம்ஹாரத்தின் போது கோகால வயிரவனாகி நின்ற தன்னைக் கண்டு அஞ்சி ஓடிய பார்வதியைப் பார்த்து சிவபெருமான் சிரித்ததை அப்பர் சுவாமிகள் குறித்துள்ளார்.

அவளது அந்தப் பயத்தை நீக்கிப் பெரு மான் அவள் கண்டு மகிழ நடனமாடியதைத் திருஞானசம்பந்தர் தோணிபுரம் பதிகத்தில் **மத்தக்களிற்று உரி போர்க்கக் கண்டு மாது பேதுறுலும் சித்தம் தெளிய நின்றாடினாள்** என்று குறித்துள்ளார்.



துன்பத்தில் துவளும் தோகை

அழுகை முகம் காட்டும் அன்னை

மனதில் தோன்றும் துன்ப உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அழுகை இருக்கிறது. குழந்தை முதல் சுடுகாடு வரை அழுகை தொடர்கிறது. குழந்தைகள் அழுதே காரியத்தைச் சாதிக்கின்றன. பெண்களும் கண்ணீரைக் காட்டியே காரியத்தில் வெற்றி பெறுகின்றனர். கொடும் நோய்கள், உடல் தாக்கப்படுதல், மனதிற்குப் பிடித்த பொருளை இழக்கும் போதும், உறவினர்கள் தன்னை விட்டுப் பிரிந்து செல்லும் போதும் எடுத்த காரியங்களில் தோல்வி அடைந்து ஏதும் செய்ய இயலாத போதிலும் மனம் பெருந் துன்பத்தை அடைகிறது. அந்த ஆற்றாமை மிக்க துன்பத்தால் கண்களில் கண்ணீர் வெளிப்படுகிறது. துன்பத்தின் வெளிப்பாடே அழுகையாகும்.

இறைவன் திருவடியைக் காணமுடியாத அன்பர்கள் அழுகிறார்கள். அந்த அழுகை என்னும் ஆயுதத்தால் ஆண்டவனை அடைகிறார்கள். "அழுதால் உன்னைப் பெறலாமே " என்கிறார் மணிவாசகர்.

அழுகை நம்மைச் சங்கடப்படுத்தும் ஆயுதமாக இருப்பதால்,அழுகையை யாரும் விரும்புவதில்லை. அழுகையை மாற்றி இன்பத்தை விளைவிக்கவே அனைவரும் முயல்கின்றனர். கலங்காத கண்டரான சிவபெருமானே அழுது துன்புற்ற செய்தியையும், புராணங்களில் காண்கிறோம். சிவபெருமானின் எண் பெரும் வீரச் செயல்களை அட்டவீரட்டம் என்பதும், அதில் திரிபுரசம்ஹாரம் என்பதும் ஒன்றாகும்.

ஒரு சமயம் பஸ்மாசுரன் என்பவன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவனது கடும்தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான், அவனுக்குக் காட்சியளித்து "வேண்டிய வரத்தைக் கேள் " என்றார். அவன் " ஐயனே! நான் யார் தலையில் கை வைத்தாலும், அவர்கள் அக்கணமே எரிந்து சாம்பலாகி விடவேண்டும் என்ற வரத்தைத் தாருங்கள் " என்று வேண்டினான்.

சிவபெருமான் அவனிடம், "அன்பனே! அது உனக்குத் தீமையாக முடியும். வேறு வரத்தைக் கேள்" என்றார். அவனோ " அந்த வரம் தான் வேண்டும் " என்று உறுதியாக இருந்தான்.

அவனது பிடிவாதத்தைக் கண்டு சிவபெருமான் "அத்தகைய வரத்தைத் தந்தேன்" என்றார்.

உடனே, பஸ்மாசுரன் " ஐயனே! தாங்கள் தந்த வரம் பலிக்குமா? என்பதைச் சோதித்தறிய வேண்டும். இந்த வனத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை யாருமே இல்லை. என் எதிரில் நீங்கள் மட்டுமே இருக்கிறீர்கள். அதனால் உமது தலையில் கையை வைத்து சோதிக்க விரும்புகிறேன்" என்று கூறி அவர் அருகில் சென்றான்.

சிவபெருமான் " என்ன, வரம் கொடுத்த என் தலையிலேயே கை வைக்கிறாயா? " என்று சொல்லிவிட்டு ஓடத்தொடங்கினார். அந்த வனமெங்கும் ஓடிக் களைத்தவர் அங்கிருந்த ஐவேலங்கொடியில் பழுத்திருந்த பழங்களுக்குள் ஒளிந்து கொண்டார்.

பஸ்மன் பல இடங்களிலும் அவரைத் தேடித் திரிந்து கொண்டிருந்தான். அவன் அவரை விடுவதாக இல்லை.

நிலைமையைத் திருமால் அறிந்தார். சிவபெருமானை அவனிடமிருந்து காக்க விரும்பினார். அழகிய பெண்ணாக வடிவம் கொண்டார். மனம் கவரும் மாயா மோஹினியாக அவர் கொண்ட வடிவம் பார்ப்பவரைக் கவர்ந்திருந்தது.

அவர் பஸ்மன் திரிந்து கொண்டிருந்த வனத்திற்கு வந்தார். பஸ்மன் அவரைக் கண்டு மோகம் கொண்டான். மாயா மோகினி அவனிடம், "அன்பரே, நான் என்னை ஆடற் போட்டியில் வெல்பவரையே மணப்பேன் என்று சபதம் செய்திருக்கிறேன். நீங்கள் என்னை மணப்பதானால் என்னுடன் ஆடி என்னை ஜெயிக்க வேண்டும் " என்றாள்.

"பெண்ணே, இப்போதே ஆடத் தொடங்கலாம்" என்றான். இருவரும் ஆட்டத்திற்குத் தயாரானார்கள். மோகினி ஆடிய அனைத்து ஆடல்களையும் அசுரன் சளைக்காமல் ஆடினான். மோகினி அவனைப் பாராட்டினாள். அவளது பாராட்டில் அவன் மனம் குளிர்ந்தான். மோகினி "இன்னும் ஒரே ஒரு வேகமான ஆட்டந்தான் அதை ஆடி விட்டால் நான் உமக்குச் சொந்தமாகி விடுவேன்" என்றாள்.

அசுரன் பாராட்டின் மயக்கத்தால் வெற்றிக் களிப்பில் மிதந்தான். அவள் ஆடத் தொடங்கினாள். அவள் அபிநயித்ததை எல்லாம் அவன் வேகமாக அபிநயித்தான்.

அவள் இறுதியாக உள்ளங்கையைத் தனது உச்சியில் அழுத்திக் கொண்டு ஆடினாள். அசுரன் தன்னை அறியாது தனது உள்ளங்கையைத் தன் தலையில் வைத்து அழுத்தினான். அக்கணமே எரிந்து சாம்பலானான்.

மாயமோகினியாக வந்த திருமாலைக் கண்டு சிவன் மோகமடைந்தார். ஐவேலங் கொடியில் இருந்து பேரழகு படைத்தவராக வெளிப்பட்டார். அவரது அழகைக் கண்டு



மோகினியும் தன்னை மறந்தாள். இருவரும் தழுவி இன்புற்று மகிழ்ந்தனர்.

பஸ்மனுக்கு சிவபெருமான் வரம் கொடுத்து மாட்டிக் கொண்டு வழி தெரியாது ஐவேலங்கொடியில் ஒளிந்து கொண்டதை யும் அவரைக் காப்பாற்ற திருமால் மோகி னியாகச் சென்றதையும் பார்வதி இடபம் சொல்லக் கேட்டு அறிந்தாள்.

இடபவாகனத்துடன் அவர்கள் இருக் குமிடத்தை அடைந்தாள். அங்கு சிவனும் மோகினியும் தழுவி மகிழ்வதைக் கண் டாள். அவள் மனது பெருத்த துன்பத்தை அடைந்தது. அத்துன்பம் கண்ணீராகவும் வெளிப்பட்டது.

இக்காட்சி தமிழகத்திற்கு ஏற்ற காட்சி யாக இல்லை என்றாலும், கேரளத்தின் சிறப்பு மிக்க காட்சிகளில் ஒன்றாகத் திகழ் கிறது. குருவாயூர், மம்மியூர் முதலிய அனேக ஊர்களில் இக்காட்சி ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

இதில் மோகினியைத் தழுவி மகி ழும் சிவனைக் காண்கிறோம், மரத்தின் மறைவில் சிவனின் காளையையும் அதன் மீது வாட்டத்துடன் அமர்ந்திருக்கும் அன்னை பராசக்தியையும் காண்கிறோம்.

தன் கணவன் வேறொரு பெண்ணுடன் தழுவி மகிழ்வதை எந்தப் பெண்ணும் விரும்புவதில்லை. அப்படி ஒரு காட்சி யைக் காண நேர்ந்தால் அப்பெண்ணின் மனம் சொல்லி மாளாத துயரத்தை அடை கிறது. அத்தகைய உணர்ச்சியை வெளிப் படுத்தும் பார்வதியின் வடிவத்தை கேரளக் கோயில் ஓவியங்களில் காண்கிறோம்.

அர்த்தநாரி வடிவில் அம்பிகை



சிவபெருமானின் அருள், பெண் வடிவில் வெளிப்பட்டு, அவ ரோடு இருப்பதைக் காண்கிறோம். சோமாஸ்கந்தர், உமாமகேசர் வடிவங் களில் அவருடைய இடப் பக்கத்தில் அமர்ந்திருப்பவளாகவும், சந்திர சேகரர் வடிவில் அவர் அருகில் நின்று கொண்டிருப்பவளாகவும் இருக் கும் பராசக்தி அவருடைய மேனியில் செம்பாகத்தைக் கொண்டவளாகக் காட்சி தருவதையும் காண்கிறோம். இந்த வடிவம் அவள் பெயராலேயே உமைபங்கர், அர்த்தநாரி, பெண்பாகன் போன்ற பெயர்களால் அழைக் கப்படுகிறது.

அர்த்தநாரி வடிவம் அமர்ந்த நிலையிலும், இடபத்தைத் தழுவிய நிலையிலும் சூரிய,சந்திர, அக்னி மண்டலங்களின் நடுவில் இருந்து ஆடும் நிலையிலும், ஆலமரத்தடியில் அமர்ந்து ஞானத்தைப் போதிக்கும் ஞானசக்தி தட்சிணாமூர்த்தியாகவும் பல வடிவங்களில் திகழ்கிறது.

சூரிய மண்டலத்தின் நடுவே நான்கு முகங்களும், எட்டுக் கரங்களும் உடையவராக அர்த்தநாரி திகழ்கிறார். இவருடைய பங்கில் திகழ்பவள் அன்னபூரணி ஆவாள். சந்திர மண்டலத்தில் நடுவே இருக்கும் அர்த்தநாரீசரின் பாகத்தில் உள்ள அம்பிகை அமிர்தேசுவரி ஆவாள். அக்னி மண்டலத்தின் நடுவே ஆடும் அர்த்தநாரீசுவரரைத் திருவண்ணாமலை ஆலயத்தில் காண்கிறோம். இதில் உள்ள பெண்பாகம் ஞானேஸ்வரி ஆகும்.

அர்த்தநாரி வடிவைச் சிவபெருமானின் தொன்மைக்கோலம் என்று இலக்கியங்கள் பேசுகின்றன.

நஞ்சை அமுதம் ஆக்கிய நாயகி

எந்நாளும் மரணமடையாத நிலையைப் பெறத் தேவர்களும் அசுரர்களும் கூடி மந்திர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைத் தாம்பாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர் அப்போது முதலில் கடலில் இருந்து ஆலம் என்னும் விஷமும், மலையில் கட்டி இழுத்ததால் உடலில் தோன்றிய காயங்களால் உண்டான வலியால் துடிதுடித்து வாசுகி கக்கிய காளம் என்னும் விஷமும் ஒன்று சேர்ந்து உலகெங்கும் பரவின.

அந்த ஆலகால விஷத்தைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் திசை தடுமாறி ஓடினர். எங்கும் வெப்பமும் புகையும் பரவியது. உலக உயிர்கள் பெருந்துன்பம் அடைந்தன. விஷ வேகத்தால் எளிய உயிர்கள் கருகித் தீய்ந்தனர். செய்வது அறியாது திகைத்த அனைவரும் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவர் அந்த விஷத்தைத் திரட்டி அடக்கி நாவல் பழம் போல் ஆக்கி வாயிலிட்டு அருந்தினார். அப்போது தேவி அந்த நஞ்சு உருண்டை அவர் வயிற்றிற்குள் செல்லாமல் அவரது தொண்டையிலேயே நிற்கும்படிச்செய்தாள். அந்த விஷ வேகத்தால் அவரது கண்டம் கழுத்து நீலமாகிக் கருத்தது, அதனால் அவர் நீலகண்டர் ஆனார். அந்த வடிவம் நீலகண்டர் எனப் போற்றப்படுகிறது. இவ்வடிவத்தில் அன்னை பராசக்தி வேகத்துடன் தாவி அவரது கழுத்தைப் பிடித்து விஷத்தைக் கண்டத்தில் தேக்கும் கோலத்தில் காட்சி தருகிறாள்.

சிவபெருமான் விஷமருந்தியதும் மயக்கம் அடைந்ததுபோல திருவிளையாடல் நிகழ்த்தினார். அப்போது தேவி அவரை மடியில் தாங்கி முந்தானையால் விசிறினாள். தேவர் களும் முனிவர்களும் சுற்றி நின்று சிவபெருமானைத் துதித்தனர்.பின்னர் அவர் எழுந்து சந்தியா தாண்டவத்தை ஆடினார்.

அம்பிகையின் மடியில் சிவபெருமான் படுத்துக்கொண்டிருப்பதை விஷாபகரண மூர்த்தி என்பர். அவரை மடி ஏந்தும் அம்பிகை அமிர்தமங்களேஸ்வரியாகத் திகழ்கிறாள்.



மகேசுவர மூர்த்தங்கள் அல்லாத சிவ வடிவங்களில் பார்வதி

சிவபெருமான் கொண்ட தெய்வ வடிவங்கள் மகேசுவர மூர்த்தங்கள் எனப்படுகின்றன. அவற்றில் பராசக்தி, உமா, கௌரி என்னும் பெயர்களில் காட்சிதருகிறாள். அவள் பெயராலேயே சில மூர்த்தங்கள் உமாமகேசுவரர், சோமாஸ்கந்தர், கௌரீலீல சமன்வித மூர்த்தி, கௌரிசங்கரர் என்று அழைக்கப்படுகின்றன. இந்த வடிவங்களில் அவை தெய்வீக மங்கையாகவே காட்சி தருகிறாள்.

இவை தவிர சிவபெருமான் அன்பர்களுக்கு அருள்புரிய வேடனாகவும், நீசனாகவும், பயிர்த்தொழில் செய்யும் பள்ளனாகவும், மீனவனாகவும், பல்வேறு கோலங்களில் வருகிறார். அப்படி வரும் வேளையில் உமாதேவியும் அவனோடு வருகிறாள். அவள் அவர் கொள்ளும் கோலத்திற்கு ஏற்ப, தானும் வேடமங்கை, பள்ளப்பெண், மீனவப்பெண் போன்ற வடிவங்களைக் கொள்கிறாள்.அம்பிகையின் அத்தகைய கோலங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.

வேடனும் வேடிச்சியும்

மலைமீது வாழ்பவர்கள் வேடர்கள். வேட்டையாடுதல் அவர்களது தொழில். திண்மையான உடலும் வலிமையான தோள்களும் கூரிய பார்வையும் கொண்டவர்கள் இவர்களை மலைக் குறவர் என்பர்.


சிவபெருமான் பல சமயங்களில் வேட வடிவுடன் தோன்றி அருள்பாலித்ததைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. அவர் பல சமயங்களில் வேடனாகத் தோன்றி அன்பர்களுக்கு வழிகாட்டி அருள் பாலித்திருக்கிறார். சுந்தரருக்கு அவன் வேட வடிவுடன் தோன்றி வழிகாட்டியுள்ளார். குருகாவூர் என்னும் தலத்தில் வேடனாகத் தோன்றி அருள்பாலித்ததை "வேடனே குருகாவூர்வெள்ளடை நீயன்றே " என்று பாடுகின்றார்.

சிவ வடிவங்களில் அவரது வேட வடிவம் தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறது.

சிவபெருமான் வேடனாக வரும்போது அவனை விட்டுப் பிரியாது இருக்கின்ற அம்பிகை தானும் வேடமங்கையாக வருகிறாள். சிவபார்வதியர் வேடன் வேடச்சியாகப் பல அன்பர்களுக்குக் காட்சி தந்திருந்த போதிலும், அவற்றுள் முதன்மை பெற்றது அர்ச்சுனனுக்கு பாசுபதம் தந்து அருள் செய்யவந்த கோலமே மக்கள் மனதில் நீங்காது இருக்கிறது.

அக்காட்சியைப் புலவர்கள் பலரும் பாடியுள்ளனர். மகாகவி காளிதாசன் கிராதார்ச்சனீயம் என்னும் வடமொழிக் காவியத்தைப் பாடியுள்ளார். கிராதர்-வேடன்: அருச்சுனன்-பாண்டவ புத்திரன்; கிராதன்-அருச்சுனர் கதையைக் கூறுவதால் அது கிராதார்ச்ஜனீயம் எனப்பட்டது.

பாரதத்தில் இக்காட்சியை வில்லிபுத்தூர் ஆழ்வார் விரிவாகப் பாடியுள்ளார். வில்லி பாரதத்தில் இடம்பெற்றுள்ள அப்பகுதி அருச்சுனன் தவநிலை சருக்கம் என்னும் பெயர் பெற்றுள்ளது. இதில் இவருடன் வந்த அம்பிகையை மலைக்



குறத்தியாகவே காண்கிறோம். அவளது எழிலை வில்லி பாரதம் அற்புதமாக விவரிக்கிறது.

வரைஅரசன் திருமடந்தை
வனமுலைமேல் மணிக் குன்றி
வடமும் செங்கை
நிறைவளையும், புலிப்பல்லால்
நிறம் திகழ் மங்கலம்
பூணும் நீலமேனி
விரை அகிலின்நறுஞ் சாந்தும்
விரித்த தழைப்
பூந்துகிலும் வேடமாதர்
நிரைநிறையே தனைச் சூழ
நின்ற வடிவு அழகினுக்கு
நிகர் வேறு உண்டோ?

மலையரசனான இமய மன்னனின் திரு மகளான உமாதேவியார் தனது அழகிய மார்பில் மலைகளில் தோன்றும் மணிகள்,

குன்றிமணிகள் கோர்த்த வடங்களை அணிந்தாள். கைகளில் யானைத் தந்தத்தால் ஆன வளையல்களையும். புலிப் பல்லால் ஆன மங்கலத் தாலியையும் அகில், குகில் இவற்றை வடித்துப் பெறப்பெற்ற சாந்தையும், மயில் தோகையால் ஆன ஆடையையும் அணிந்து அணிஅணியாக நின்ற வேட மாதர்களுக்கு நடுவே பேரழகியான வேடுவச்சியாக நின்றாள் என்பதாகும்.

மேலும் அம்பிகை கொண்டையிட்டு அதில் காட்டு மலர்களைச் சூடியுள்ளாள். மார்பில் மூங்கிலில் விளைந்த முத்துக்களையும், யானைத் தந்தங்களில் இருந்து பெறப்பெற்ற முத்துக்களையும் கோர்த்து அணிந்துள்ளார். மான் தோலாலான கச்சையையும் இடையாடையையும் அணிந்துள்ளாள். இடையில் மயில் தோகைகளை அணிந்துள்ளாள். காலில் சிலம்புகளை அணிந்துள்ளாள்.

பாரததேசமெங்கும் கலைஞர்கள் பார்த்தனுக்கு அருள்புரிய வந்த சிவ பார்வதியரின் வேடரூபத்தைச் சிற்பங்களாக வடித்துவைத்து மகிழ்ந்துள்ளனர். இந்த வடிவில் அம்பிகையின் வேடிச்சி வடிவம் சிறப்பாக அமைகிறது.

சுதைச் சிற்பங்களில் அமைக்கும்போது வேடுவச்சி வடிவம் அக்கால வேட்டுவக் கோலத்துடன் அமைகின்றது. ஆனால் வழிபாட்டிற்கென திருவுருவங்களை அமைத்தவர்கள் இயல்பான தெய்வத் திருக்கோலமாகவே அவளை வடித்துள்ளனர்.

குறிப்பாகக், கேரளம் முழுவதிலும் உள்ள கோயில்களில் சிவபெருமான் பாசுபதம் அருளவரும் வேட்டுவ கோலமும் அவருடன் வேடிச்சியான பார்வதி வடிவமும் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மரச்சிற்பங்களாகவும், வண்ண ஓவியங்களாகவும் கிராதார்ஜுனீயம் என்னும் அருச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கும் வரலாறு தீட்டப்பட்டுள்ளது. அவற்றில் அதியுன்னத வீரனாக வேடவடிவுடன் விளங்கும் சிவபெருமானையும் அவனுடன் வேடமங்கையாக கோலம் கொண்ட அம்பிகையையும் கண்டு மகிழ்கிறோம்.

மீனவனும் மீனவப்பெண்ணுமாய்

உயரமான மலைகள் நமக்கு பிரமிப்பை ஊட்டுவதுபோலவே, ஆழ்ந்து பரந்த கடலும் நமக்கு பிரமிப்பை உண்டு பண்ணுகின்றன. மலைவாழ் குன்றக்குறவரை வேடர் என்பது போலவே, கடலில் மீன் பிடித்து வாழும் வலைஞரும் வேடர் என்றே அழைக்கப்பட்டனர். திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான் சிவபெருமானை **கேவேடராகி கெளிறது படுத்தும்** என்ற தொடரால் அழைப்பதைக் காண்கிறோம்.

ஒரு சமயம் மலைமகளான பார்வதி தேவியார் பாண்டிய நாட்டிலுள்ள கடற்கரைப் பட்டினத்தின் தலைவனுக்கு மகளாகத் தோன்றி வளர்ந்தாள்.

அவள் பருவம் அடைந்தபோது கடலில் ஒரு பெரிய சுறா மீன் தோன்றியது. அதன் அட்டகாசத்தால் மீன்பிடி தொழிலே பாதித்தது. மீனவர்கள் யாரும் கடலுக்குள் போக முடியவில்லை. அது மீனவர்களின் படகுகளை வாலால் அடித்தும் தலையால் மோதியும் அழித்தது. நாளுக்குநாள் அதன் அட்டகாசம் பெருகிக் கொண்டே போனது.

மீனவர்கள் தலைவனிடம் வந்து சுறாவை அழித்துத் தம்மைக் காக்கும்படி வேண்டினர். தலைவன் அந்த சுறாவை அழிப்பவனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து தருவதாக அறிவித்தான்.

சிவபெருமான் மீனவனாக வடிவு கொண்டார். இடுப்பில் குறுவாள் தரித்தார். பெரிய வலையைத் தோளில் கொண்டார்.

தலையை எடுத்துக்கட்டி, அதில் சுறாவின் கொம்பை அணிந்தார். கடல் முத்துமாலைகளை அணிந்தார். மீனவர் தலைவனின் குடிலுக்குச் சென்றார். அவனிடம் சுறாவைத் தான் அடக்க இருப்பதாகவும் தனக்கு அனுமதி அளிக்கும்படியும் வேண்டினார். மீனவர் தலைவன் "அப்படியே ஆகட்டும்" என்றான்.

சிவபெருமான் படகு ஏறி கடலுக்குச் சென்றார். கடும் போராட்டத்திற்குப் பிறகு சுறாவை அழித்தார். மீனவர் தலைவன் தான் வாக்களித்தபடி தன் மகளாக வளர்ந்த பார்வதியை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். பின்னர் அவர்கள் அனைவருக்கும் தங்கள் தெய்வ வடிவைக் காட்டி அருள்புரிந்து மறைந்தனர்.

பரதர் தலைவன் அவளைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்தளித்த வேளையில், அம்பிகை மீனவப்பெண்கள் மரபுக்கு ஏற்ப, மணமகளாக வடிவம் கொண்டாள் என்றும், சிவபெருமான் மீனவக் கோலத்துடன் இருந்தே அவளைத் திருமணம் செய்து கொண்டார் என்றும், பரதர் குலப் பெண்ணாகப் பிறந்த பார்வதி பொன்னால் செய்த பலவிதமான அணிகலன்களுடன், பாசி மணிகள், பவள மணிகள், சங்கு மணிகள், முத்து மணிகளால் கோர்த்த மாலைகளையும் அணிந்து பரதர்குலப் பெண்களில் பேரழகியாக இருந்தாள் என்றும் திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

மீனவனாக வந்த சிவபெருமான் வடிவை மதுரைச் சொக்கர் என்பர். அவனுடன் இருக்கும் அம்பிகையை மீனவப் பெண்போல கிளிஞ்சல் மணிமாலைகள் அணிந்தவளாக முத்துமாலைகளைச் சூடியவளாகப் போற்றுகின்றனர்.

பார்வதி தோன்றி வளர்ந்ததால் மீனவர் குலம் அன்றுமுதல் பர்வதராஜ குலம் என்று அழைக்கப்பட்டது. கடலோரத்தில் அமைந்த சிவாலயங்களில் மதுரைச் சொக்கர் என்னும் திருவுருவம் இருக்கக் காண்கிறோம். இவர் படகோட்டும் கோலத்தில் இருப்பார். முன்னாளில் இவரை அலங்கரித்து, கடலுக்கு எடுத்துச் செல்வர். அங்கு படகில் வைத்து கடலின் உள்ளே எடுத்துச் சென்று, மீன்பிடி விழாவை நடத்துவர். இப்போது இவ்வழக்கத்தைக் காண முடியவில்லை.

திருவிளையாடற்புராணத்தை ஓவியமாகத் தீட்டியவர்கள் பார்வதிப் பெருமாட்டியை அழகிய மீனவப் பெண்ணாகத் தீட்டியுள்ளனர்.

உயர்ந்த மலைகள் மீது வாழும் மலைநாட்டு மகளான குறத்தியாகவும், அலைமிகுந்த ஆழிக்கடல் ஓரம் வாழும் பரதவர் குலத்தில் பிறந்த மீனவப் பெண்ணாகவும் உமாதேவியைக் கண்டு மகிழ்ந்த நாம், மருத நிலப் பெண்ணாக வயலில் வேலை செய்யும் கோலத்தில் இருப்பதையும் கண்டு மகிழலாம்.

பள்ளனும் பள்ளியுமாய்

பள்ளர் என்பது பயிர்த்தொழில் செய்யும் பழம்பெருமை மிக்க குடியின் பெயராகும். பயிர்த்தொழிலே உயிர்களைக் காக்கும்தொழிலாகும். உழவுத்தொழிலின் சிறப்பினை விளக்கி வள்ளுவன் ஓர் அதிகாரமே படைத்துள்ளார்.

வயலில் வேலை செய்வோர் பள்ளர் எனப்பட்டது போலவே பள்ளர் இனப் பெண்கள் பள்ளியர் என்று அழைக்கப்பட்ட



னர். சிவபெருமான் பள்ளனாகவும், பார்வதி பள்ளியாகவும் விநாயகரும் முருகனும் பள்ளச் சிறுவர்களாகவும் சென்று, வயல் வெளியில் இருந்து திருவிளையாடல் புரிந்ததை பேரூர் புராணம் விரிவாகக் கூறுகிறது.

மேலும் பேரூர்ப் புராணத்தில் அம்பிகை நடவு நடும் பள்ளப்பெண்ணாகத் தோன்றியது சிறப்புடன் கூறப்பட்டுள்ளது.

அம்பிகை வயல் வெளியில் பள்ளனாக இருக்கும் சிவபெருமானுடன் பள்ளப் பெண்ணாகச் சென்று அவருக்குச் சோறூட்டினார் என்பதை,

பட்டிநாயகர் இடம்பிரியா
பச்சை நாயகி பள்ளியாகி
நாயகர் கைத் தலைக்கலத்து
ஊட்டி எழில் வயல் விளை
செய்வான் நின்றாள்.

என்ற இவ்வரிகளால் முனிவர் குறித்துள்ளார்.

அதிகாலையிலேயே வேலைக்குச் சென்று விடும் கணவனுக்குப் பள்ளப் பெண்கள் சோறாக்கி எடுத்துச் சென்று அளிப்பதும் வயலிடை அமர்ந்து அவர்கள் அருந்துவதும் வழக்கம்

மேலும் அவள் இறைவனுடன் நின்று நாற்றுநட்டு வயல் வேலை செய்தது கொண்டிருப்பதை சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்டு மகிழ்ந்து வணங்கியதை,


வேத நாடரிய விழுப்பெரும்
பொருளாய் விளங்கிய பட்டிநாயகரும்
சீதவாண் முகத்து மரகத மயிலும்
தேவர் பூதர்கள் புடைநெருங்கப்
பாதத்தாமரைகள் சேறகத்துஅலரப்
பயிற்திரு விழாவினைத் தொண்டர்
காதன்மீக கூரச் சேயிடை நோக்கிக்
களிப்பொரு எதிர்பணிந் தெழுந்தார்

இதன் பொருள் ; வேதங்கள் தேடியும் காண முடியாத புனிதமான மேலான பெரும் பொருளாய் விளங்குகின்ற பட்டி நாயகரான சிவபெருமானும், குளிர்ச்சி பொருந்திய மேலான மரகதமயில் போன்றவளான பச்சைநாயகி உமையம்மையும் தேவர்களும் பூதர்களும் சூழ, திருவடிகள் சேற்றில் பதிய நாற்றுநடும் பணிகளைச் செய்வதைக் கண்டு வியந்த சுந்தரர் அவர்கள் அருகில் சென்று மகிழ்வுடன் பணிந்தார் என்பதாகும்.

இதன்மூலம் அம்பிகை அழகிய பள்ளப் பெண்ணாக வடிவம் கொண்டதையும் சேற்று வயலில் பெருமானுடன் நின்று நடவு நட்டதையும் விளக்கமாக அறிந்து மகிழ முடிகிறது

பேரூர் ஆலயத்திற்கு முன்பாக பட்டி மேடை என்னும் மேடைமீது பட்டீசுவரர் ஆலயம் உள்ளது. இதில் சிவபெருமானும் பார்வதியும் நின்ற கோலத்தில் உள்ளனர்.

பள்ளனும் பள்ளியுமாய்



சிவபெருமான் இடது கையில் வயலில் தண்ணீரை மடைமாற்றம் செய்ய மண் வெட்டியோடு இருக்கிறார். அம்பிகை நாற்று நடும் பெண்ணாக கையில் நாற்று முடிச்சுடன் இருக்கிறார்.

இந்தத் திருமேனிகளைப் படைத்த கலைஞன் தெய்வ வடிவங்களுக்கு அமைப் பது போல் தலையில் கிரீடம் இடையில் ஆடை அமைப்பு ஆகியவற்றுடன் உரு வாக்கியுள்ளாள். கொங்குநாட்டு வழக்கில் உள்ளவாறு கோவை சிவனடியார் திருக் கூட்டத்தைச்சேர்ந்த ஓவியர் **சிவத்திரு. சதீஷ்** அவர்கள் சிவபார்வதியரின் பள்ளன்-பள்ளி கோலத்தை வரைந்துள்ளார். அந்த அற்புத வடிவையே இங்கே காண்கிறோம்.

சிவபெருமான் வயல் வேலை செய்யும் பணியாளனாக வந்த வடிவம் இப்போது அது தஞ்சை அருங்காட்சியகத்தில்

இருக்கிறது. இதில் பெருமான் சடையை அழகிய முண்டாசாக கட்டி யுள்ளான். அதில் சந்திர பிறையை வைத் துக் கட்டியுள்ளான். ஓய்வாக காலை மாற்றி நின்று காளை மீது சாய்ந்து கொண்டிருக் கிறான். இவனுடன் இருந்த தேவியின் சிலை இப்போது இல்லை. வேறு அம்மன் சிலையை வைத் துள்ளனர். அதனால் அம்பிகையை அந் நாளைய எழிற்கோலத் தைக் காண முடியவில்லை.

தமிழர் தம் நிலப்பரப்பை ஐந்தாக வகைப்படுத்தி அவற்றிற்குக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பெயரிட்டனர். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்படும் வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் எனப் படும். தமிழ்நாட்டில் பாலை நிலம் என்று ஒன்று இல்லை என்றாலும் குறிஞ்சி நில மும் முல்லை நிலமும் கடும் வறட்சியால் நெடுங்காலம் மழையற்றுப் பாலைவனத்தின் இயல்பை அடையும் என்பர்.

அருச்சுனனுக்கு அருள வந்த கோலத் தில் மலையகக் குறிஞ்சி மகளாகவும், சுந்தரருக்காக திருவிளையாடல் புரிய பேரூ ரில் மருதநில மங்கை பள்ளியாகவும், தென் பாண்டிக் கடற்கரையில் பரதவர் குலப்பெண்ணாகவும் தோன்றி, அருள் பாலித்ததைக் கண்டோம். இனி அம்பிகை சித்தேசுவரியாகவும், மருத்துவம் பார்க்கும் வைத்தீசுவரியாகவும் வருவதைக் காணலாம்.

யோகீஸ்ரர்- யோகேஸ்வரி

சிவபெருமான் யோகிகளின் நாயகன் அதனால் அவன் யோகேசுவரன் என்று அழைக்கப்படுகிறான். யோகநிலை சித்தி யானால் அஷ்டசித்திகளும் கைவரப் பெறும் சிவபெருமான் எல்லாம் வல்ல சித்தனாக எழுந்தருளும் வேளையில் அவனுடன் அம்பிகை சகல காரிய சித்தேஸ்வரியாக எழுந்தருளுகின்றாள்.

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆல யத்துப் பிராகாரத்தில் வடக்கு நோக்கி அமைந்த புடைப்புச் சிற்பத்தில் எல்லாம் வல்ல சித்தனாகவும் அவனுடன் அம்பிகை சகல காரிய சித்தேசுவரியாகவும் வீற்றிப்ப தைக் காண்கிறோம். இச்சிற்பத்தில் பெரிய மணிமண்டபத்தில் சிவபெருமான் சித்தர்களுக்குரிய கொண்டையோடு யோக தண்டத்தில் கையை ஊன்றியவாறு ஆசனத் தில் அமர்ந்துள்ளார். இவருக்கு இடப்பக் கம் அம்பிகை தனது இடது காலைக் குத்திட்டு வைத்து அதையே யோக தண்ட மாகக் கொண்டு முழங்கையை ஊன்றியுள் ளாள். சிவபெருமானின் தலைமீது சந்திர பிறையைக் காண்கிறோம்.


இதுபோன்ற சிவபார்வதியர் சிற்ப அமைப்பை வேறெங்கும் காண முடிய வில்லை.

வைத்தீசுவரனும் தைலநாயகியும்

உடலில் காலமாற்றத்தாலும், உணவு மாற்றத்தாலும் மனப்போராட்டத்தாலும் நோய்கள் உண்டாகின்றன.

சில நோய்கள் உடனே தீர்ந்து விடு கின்றன. சில காலம் கடந்து தீர்க்கின்றன.

யோகீஸ்ரர்- யோகேஸ்வரி



திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் முதற்சுற்றில் அனுக்கன் வாயிலை நோக்கி அமைந்துள்ள சிவயோகநாதர் சித்தயோகேஸ்வரி புடைப்புச் சிற்பம் இவர்களைச் சுற்றி விநாயகர், அதிகார நந்திதேவர், சாமரம் வீசும் பெண்கள்கள் இசைக்கருவிகளை இசைக்கும் யோகிகள் ஆகியோர் இருக்கின்றனர்.

தீராத நோய்களும் விடாமல் துரத்திக் கொண்டே இருக்கிறது. சில சமயங்களில் ஆண்டவன் அருள் இல்லையானால் மருந்துகளும் பயனற்று போகும். அதனால் நோய்கள் நீங்கி வாழ்வில் சுகம் பெற தெய்வத்தின் அருள் வேண்டியுள்ளது.

தீராத நோய்கள் பலவும் அருளா ளர்கள் அளித்த விபூதியால் குணமானதை வரலாறுகள் கூறுகின்றன. உடற்பணியோடு பிறவிப் பிணியையும் தீர்ப்பவனாகச் சிவபெருமான் இருக்கிறார். அவரை வைத்தியநாதன் என்று அழைக்கின்றனர். அவனை பிறவிப் பிணியை மாற்றும் பவரோக வைத்தியநாதன் என்றும் பிறவிப் பிணி தீர்க்கும் மாமருந்து என்றும் சம்சார வைத்தியன் என்றும் போற்றுகின்றனர்.

சில சமயம் அன்பர்களின் அருந்துயர் தரும் பிணிகளை நீக்க சிவபெருமான் மருத்துவக் குளிகைகள், பச்சிலைகள் போன்றவை அடங்கிய பெட்டியுடன் வைத்தியனாக வந்ததை வரலாறுகள் கூறுகின்றன. அப்படி




வரும் போது அம்பிகை பலவித மான தைலங்களைத் தனது தோள் பையில் தாங்கி வந்ததாகக் கூறுவர்.

நோய் தீர்க்கும் மூலிகைகளை நல் லெண்ணெய், விளக்கெண்ணெய் போன்ற எண்ணெய்களில் ஊறவைத்துக் காய்ச்சி வடித்து தைலம் தயாரிக்கின்றனர். இவை நோய் தீர்க்கும் மாமருந்துகளாக இருக் கின்றன. சித்த மருத்துவத்தில் தைலங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன.

முன்னாளில் ஆலயங்களில் மூலிகை எண்ணெய்களைப் பெருமானுக்கு அபிஷே கம் செய்து அவற்றை எண்ணெய்க் கிணறு களில் சேமித்து வைப்பர். தேவையான போது எடுத்து அன்பர்களுக்கு அளிப்பர். உடலில் தசைப்பிடிப்பு, எலும்பு முறிவு, தோல் நோய்கள் போன்றவற்றிற்கு இந்தத் தை லங்கள் சிறந்த மருந்தாக இருக்கின்றன.

ஆங்கில மருத்துவம் பெருகிய போது இந்த தைலம் தயாரித்து அபிஷேகம் செய் வது, மக்களுக்கு அளிப்பது போன்றவை படிப்படியாக நின்றுவிட்டது.







பறவைகளாய் விலங்குகளாய் பரிந்து வந்தருளும் பரமனும் பார்வதியும்

அன்பர்களுக்கு அருள மானிடனாக வும், தேவனாகவும் தோன்றிக் காட்சியளித்த சிவபெருமான் யானை, மான், காளை, மயில், புறா போன்ற வடிவங்களையும் எடுத்து வந்துள்ளார்.

சித்திர வனத்தில் உமாதேவி பெண் யானையாக நின்ற போது பெருமான் பெரிய ஆண் யானையாக உருவம் கொண்டு அவளை அணைத்து மகிழ்ந்தார். அப்போது விநாயகர் தோன்றினார்.

இதனைத் திருஞானசம்பந்தர்

பிடியதன் உரு உமைகொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும்அவர்இடர்
கடிகணபதி வர அருளினன்மிகுகொடை
வடிவினள் பயில் வலிவலமுறை இறையே

என்ற பாடலில் குறித்துள்ளார்.

அம்பிகை அழகிய மயிலாக மண்மேல் வந்து சிவபூசை செய்து மகிழ்ந்த வேளை யில் பெருமாள் ஆண்மயிலாகத் தோன்றி ஆடி மகிழ்ந்தான். மயிலாடுதுறை மாயூர நாதர் ஆலயத்தில் அம்பிகையைப் பெண் மயிலாகவும், சிவபெருமானை ஆண் மயி லாகவும் அழகிய உலாத்திருமேனிகளாகக் காண்கிறோம்.

அமர்நாத்தில் சிவபெருமான் ஆண் புறாவாகவும், பார்வதிதேவி பெண் புறாவா கவும் இருந்திருப்பதாகக் கூறுகின்றனர்.

சிவபெருமான் பெரிய கொம்புக ளுடன் கூடிய சாரங்கமாகத்(மான் வடிவில்) சரங்கநாதத்தில் இருந்தார். அவருடன் பெண் மானாக அம்பிகை ஆடி மகிழ்ந்தாள். அவ் விடம் சாரங்கநாத் என்று அழைக்கப்பட்டு இப்போது சாரநாத் என வழங்குகிறது.



அப்பர் சுவாமிகள் காளத்தியாரை வணங்கி மகிழ்ந்தபின் வடநாட்டுப் பயணம் மேற்கொண்டு காசி, கேதாரம் முதலிய தலங்களை வணங்கியவாறு இமயமலையை அடைந்தார்.

அங்கிருக்கும் கயிலை மலையைத் தரிசித்துப் பெருமானின் அருள்பெற விழைந்தார். முதுமை மிக்க நிலையில் இருந்த அவருக்கு அது கடினமாக இருந்தது. சிவ பெருமான் அவரைத் தடுத்து ஆட் கொண்டு அங்கிருந்த குளத்தில் மூழ்கும் படி பணித்தார்.

திரும்ப அப்பர் எழுந்தபோது திரு வையாற்றிலுள்ள குளத்தின் கரையில் இருக்கக் கண்டார். அவருக்கு எல்லாம் சிவசக்தியராகவே தோன்றுகிறது. அதை **மாதர்பிறைக் கண்ணியானை** என்னும் பாசுரத்தில் வைத்துப் பாடினார். இதில் யானை, குயில், மயில், பன்றி, அன்றில், அன்னம் காணும் வடிவமெல்லாம் சிவ சக்தியராக இருப்பதைக் கண்டு கண்டறி யாதன கண்டேன் என்று பாடிக் களித்தார்.

கட்டங்கம் ஏந்தும் கபாலியும் கபாலினியும்



சைவ சமயப் பிரிவுகளில் லகுளீசம், பாசுபதம், மகாவிரதம் காபாலிகம் என்ற பிரிவுகள் தென்னாட்டில் இருந்து வந்தன.

இவற்றில் பாசுபதர்கள், மகாகாளர்கள் தமது திருக்கோயிலை மயானம் என்னும் சொல்லால் அழைத்தனர். மயானம் என்ற பெயரில் அனேக சிவாலயங்கள் இருந்துள் ளன. திருஒற்றியூரில் உள்ள ஒரு கல்வெட்டு மயானமும் (திருக்கோயிலும்) மடமும் உடைய சதுரனான பண்டிதர் என்பவரைக் குறிக்கிறது.

திருக்கடவூர் மயானம், நாலூர் மயா னம், கச்சி மயானம் என்பவை தேவாரத்துள் போற்றப்பட்ட தலங்களாகும்.

இத்தலங்களில் காஞ்சியில் உள்ள கச்சி மயானம் வைப்புத் தலமாக இருக் கிறது. இக்கோயில் காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் ஆலயத்தில் கொடிமரத்திற்கு அருகில் மேற்கு நோக்கி உள்ளது.

இங்கு ஆதியில் பல்லவர் கால உமா மகேசுவரர் வடிவம் சிவலிங்கத்திற்குப் பின் புறம் இருந்தது. அதை இப்போது இக் கோயில் குளத்தின் கரையிலுள்ள இடபேசு வரத்தில் பொருத்தியுள்ளனர். இது வழக் கம் போன்ற உமாமகேசுவர வடிவமாக இல்லை.

சிவபெருமான் கையில் சூலம் கத்தி, கட்டங்கத்துடன் வீற்றிருக்க அவருக்கு இடப் பாகத்தில் அம்பிகையும் கத்தி, கட்டங்கம், சூலம், கபாலம் ஆகியவற்றை ஏந்தி நாற்கரங்களுடன் காட்சி தருகிறாள்.

பெரும்பாலும் சிவனோடு அமைக்கும் போது உமையை இரண்டு கரங்களுடனே அமைப்பர். ஆனால் இங்கு சிவனைப் போலவே நான்கு கரங்களுடன் இருப்பது டன் கட்டங்கம் கபாலம் ஏந்தியளாகக் காட்சி தருவது கபாலிக சமயத்தில் சிவ பெருமானை உக்ரகபாலிகனாக வழிபடு வதைப் போலவே, அம்பிகையையும் உக்ர கபாலினியாக வழிபட்டதை அறிய முடிகிறது. ❂



அத்தன் சிவபெருமான் அருளாலும்
அவன் இடப்பாகத்தில் வளரும்
மரகதப்பெண் கொடியான பராசக்தி அருளாலும்
எல்லோரும் எல்லாமும் பெற்று
இனிது வாழ்க! வளர்க! வாழி நலம் சூழ!!






பேரூர்ப் பெருமானே! பிறவாநெறியானே! பெருகிய வளமும் நலமும் அருள்வாய்!